பக்கங்கள்-16 | பங்குனி 17,2013 | விலை-30.00

விளம்பரங்கள்
அனைத்துவகையான
விளம்பரங்களையும்
பிரசுரிக்க
நாடுங்கள்...
தினப்புயல்
154, 6ம் ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

நடுநிலை இதழ்

# தினப்புயல்

THINAPPUYAL

තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

அன்பான வாசக நெஞ்சங்களே

எமது
தினப்புயல் பத்திரிகை
தொடர்பான அனைத்து
விமர்சனங்களையும்,
ஆக்கங்களையும்,
வரவேற்கின்றோம்.

மலர்-01 | Tel&Fax:(+94)247451360-1, Hot line:0711850885 Email:tthinappuyalnews@yahoo.com | இதழ் -30



## புலிகளின் தளபதிகளுக்கு நடந்தது என்ன?..

## ஜெனிவா மகாநாடும் கூட்டமைப்பும்

## முல்லையில் தமிழ் மக்களின் இருப்பை இல்லாதொழிக்க முயற்சி...




-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# விடுதலைப்புலிகளின் முன்னணித் தலைவர்களுக்கு நடந்தது என்ன?

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது, பல்வேறு தரப்பட்ட நாடுகளின் ஒத்துழைப்புடன், இலங்கை அரசு விடுதலைப்புலிகளின் நடவடிக்கையை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தது அனைவரும் அறிந்த விடயமே, 35 வருட காலமாக தமிழ் இனத்தின் விடுதலைக்காக போராடி வந்த, தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரும், அவருடன் இருந்த ஏனைய மூத்த தலைவர்களும் என்னவானார்கள் என்ற விடயத்தை உற்று நோக்கும் போது, **ஒரு சில மூத்த தளபதிகள் சைனற் வில்லைகள் அருந்தி உயிரிழந்தனர், மற்றும் சில தளபதிகள் களமுனையில் கொல்லப்பட்டனர். ஒரு சில தளபதிகள் இராணுவத்தினரிடம் சரணடைந்த போது கொல்லப்பட்டனர்.**

**மற்றும் சில தளபதிகள் உயிருடன் பிடிக்கப்பட்டு, இராணுவத்தினரின் சித்ரவதைக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டனர்.** இதன் ஒரு கட்டமாக சனல்-4 தொலைக்காட்சியில் விடுதலைப்புலிகளின் தளபதிகளில் ஒருவரான ரமேஷ், சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதற்கான புகைப்படங்கள்,

இராணுவத்தினராலும் பல்வேறு விதமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அது எவ்வாறு எனின், பல தளபதிகள் போராளிகள் கொல்லப்பட்டதை அல்லது காணொளிகளாக வெளியிட்ட இலங்கை அரசு ஏன் பொட்டு அம்மான், சூசையினுடைய உடல்களை தெளிவாக வெளியிடவில்லை என்ற கருத்தும் பல்வேறு தரப்பினரிடையே நிலவிவருகின்றது.

**''எம் தலைவன் சாகவில்லை என்றும் புலி ஓய்வதில்லை" என்று கூறிக்கொள்ளும் அதேநேரம், பொட்டம்மான் சூசையோடு புறப்பட்டார் எம் தலைவன் என்ற பாட்டும் வெளிவந்திருக்கின்ற நிலையில், மக்கள் மனதில் மற்றுமோர் போராட்ட முன்னெடுப்பை அல்லது ஓர் எதிர்ப்பு அலை உருவாவதற்கு ஏதுவான வகையில், முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற மூத்த தளபதிகளின் கொலைகள் மக்கள் மனதில் நிலைத்து நிற்கின்றன.**

விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான பிரிகேடியர் சொர்ணம், ஆனந்தபுர முறியடிப்புச் சமரில் தனது காலை இழந்தார். இதன்

கட்டமைப்பை உடைக்கலாம் என, குள்ளநரி என்று வர்ணிக்கப்படும் ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்க அரசுடன் இணைந்து பிரபா - கருணா என்ற பிளவை ஏற்படுத்தி அதில் வெற்றியும் கண்டார்.

24.06.2005 அன்று விடுதலைப்புலிகளும் இலங்கை அரசும் சமாதான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்ட அதேநேரம், ரணில் விக்கிரமசிங்க விடுதலைப்புலிகளுடன் இரகசிய ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கவிடயமாகும். ஆனால் இக்கைச்சாத்தானது பிரபாகரனுக்கு எள்ளளவும் விருப்பமில்லாததொன்றாகவே இருந்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க பேச்சொன்று செயலொன்றாக செயற்பட்டிருந்தார். இதனால் அவருடைய ஜனாதிபதிக் கனவு விடுதலைப்புலிகளால் இல்லாதொழிக்கப்பட்டது. இவ்வாறு இருக்கும் காலகட்டங்களில், மஹிந்த ராஜபக்ஷவின் அரசு தமது அரசியல் பலத்தை மேலும் பலப்படுத்திக்கொண்டது. அதேநேரம் பிரபாகரனும் ஆயுதக்கொள்வனவில் ஈடுபட்டிருந்தார். இருப்பினும் விடுதலைப்புலிகளின் அன்றைய இராணுவ கட்டளைத்தளபதியாக இருந்துவந்த கருணாவின் பிரிவு என்பது, விடுதலைப்போராட்டத்தின் வலுவைச் சரிபாதியாக குறைத்து பார்க்குமளவிற்கு உட்படுத்தப்பட்டது.

**கருணா அம்மானின் தாக்குதல் நடவடிக்கை என்பது, இலங்கை அரசின் மத்தியில் மனோ ரீதியான அச்சுறுத்தலைக் கொடுத்துக்கொண்டேயிருந்தது.** 10,000 படைகளைக் கொண்டு ஒரு இராணுவ நடவடிக்கைகளைச் செய்தாற்கூட அதனை முறியடிக்கக்கூடிய

வெற்றிகொள்ளமுடியும்.


அண்ணே நீங்கள் யாரைச் சொல்லுகீறீர்கள். தளபதிகள் என்று கூறுவது எனக்கு புரியவில்லை என்றார் தீபன்.

இதன் போது பிரபாகரன் பொட்டுஅம்மான் கொடுத்த தரவுகளின் அடிப்படையில், பானு உட்பட ஒரு சிலரின் பட்டியலை கேர்ணல் தீபனிடம் வழங்கியிருந்தார் பிரபாகரன். அதன்பின்னர் தீபனுடன் விருந்துபசாரத்தை முடித்துக் கொண்ட பிரபாகரன் தான் சொன்னதைச் செய்யுங்கள் என்று கூறிவிட்டு சென்றுவிட்டார்.

கேர்ணல் தீபனுக்கு பிரபாகரன் கூறியதிலிருந்து ஒரே குழப்பமாக இருந்தது. இதன் போது வன்னி நிலப்பரப்பில் இராணுவம் நாலாப்பக்கங்களிலுமிருந்து முன்னேறிக் கொண்டிருந்தது. எந்தப்போர் முனையை எடுத்துக்கொண்டாலும் தோல்வி என்ற நிலைப்பாட்டிலேயே விடுதலைப்புலிகளினுடைய செயற்பாடுகள் இருந்துவந்தது. தலைவரைக் காப்பாற்றும் நோக்குடன், 1500 கரும்புலிகள் உட்பட இம்ரான், பாண்டியன் படையணியும் தமது பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

**இதன்போது கேர்ணல் ரமேஷிடம் படையணிப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. கணிசமான அளவு இராணுவ இழப்பை ஏற்படுத்திக்கொண்டிருந்தார் ரமேஷ். ரமேஷின் படையணிகள் பல்லாயிரக்கணக்கான இராணுவப்படையணியை சுட்டு வீழ்த்திக் கொண்டிருந்தார்கள் என அப்போதிருந்த மக்கள் தொலைக்காட்சியில் செய்திகள் வெளியாகிக்கொண்டிருந்தன. வன்னிக்குள் வரும் இராணுவத்தினரை அவர்களுக்கு**





உட்பட பல இணையத்தளங்களில் வெளியிடப்பட்டிருந்தமை, உலக அளவில் இலங்கை அரசுக்கு பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியிருப்பதுடன், மனித உரிமை மீறல்கள் தொடர்பில், இலங்கை அரசு முக்கிய பங்கை வகித்திருக்கின்றதென்பது இதனூடாக தெளிவாகின்றது.

இதே போன்று விடுதலைப்புலிகளின் முக்கிய பல உறுப்பினர்களும் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டனர். ஆனால் எல்லா புகைப்படங்களும் இராணுவத்தினராலோ அல்லது அது தொடர்பான படப்பிடிப்பாளர்களாலோ எடுத்துக்கொள்ள முடியவில்லை. மட்டுமன்றி விடுதலைப்புலிகளின் பல பெண் போராளிகள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு அவர்களுடைய அங்கங்கள் வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தமையும், பல இணையத்தளங்களில் காட்சிகளாக வெளியிடப்பட்டிருந்தன.

போரை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்ற நோக்கில் விடுதலைப்புலிகளின் அரசியற் துறைப்பொறுப்பாளர் பா.நடேசன், சமாதானச் செயலாளர் புலித்தேவன் உட்பட ஒரு சில போராளிகளும் பொது மக்களும், இறுதி யுத்தத்தில் சரணடையச் சென்றபோது, கண்மூடித்தனமாக இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட காட்சிகளும் ஆதாரமாக சனல் -4 தொலைக்காட்சியில் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.

மற்றும் விடுதலைப்புலிகளின் பொட்டு அம்மான், சூசை இருவரினதும் மரணங்கள் குறித்து மக்களாலும்


காரணமாக சைனட் வில்லை அருந்தி தன்னைத்தானே, தாயக விடுதலைக்காக அர்ப்பணித்துக்கொண்டார். இது போன்று தளபதி ஜெயம், கேர்ணல் தீபன், இறுதிக் கட்ட யுத்தத்தில் உயிர் தியாகங்களை செய்துகொண்டமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

-இரணியன்-

### இத்தனை தளபதிகளையும் கொண்டிருந்த விடுதலைப்புலிகள் ஏன் தோல்வியை தழுவிக்கொண்டனர்?

குறிப்பாகச் சொல்லப்போனால் கேர்ணல் பானுவின் காட்டிக்கொடுப்பே, ஏனைய தளபதிகளின் உடைவுக்குக் காரணமாக அமைந்தது மட்டுமல்ல, தமிழீழ விடுதலைப்போராட்டம் தோற்பதற்கும் காரணமாக அமைந்தது என, தமிழீழ விடுதலைப்புலிகளின் புலனாய்வு வட்டாரங்கள் அப்போது தெரிவித்திருந்தன. விடுதலைப்புலிகளின் வரலாற்று ரீதியாக தளபதிகளின் உடைவுகள் என்று நோக்கும்போது, முன்னைநாள் அரசியற் துறைப்பொறுப்பாளர் யோகரட்ணம் யோகி, தளபதி கிட்டு, மாத்தையா, சலீம் மாஸ்ரர், புலனாய்வுப் பொறுப்பாளர் ரமணன் இப்படியிருந்த தளபதிகளின் நிலையும், தற்போதைய தளபதிகளின் நிலையையும் ஒப்பீட்டளவில் பார்க்கின்றபோது இவர்களின் நடவடிக்கைகளே இப்போராட்டம் தோல்வியடைந்ததற்கான காரணங்களாக அமைந்தது எனலாம்.

அதேபோன்று விடுதலைப்புலிகள் 2001-2004 ஆம் ஆண்டு வரையிலான பேச்சுவார்த்தை காலப்பகுதியினுள், எவ்வாறு விடுதலைப்புலிகளின்



கருணா அம்மான். இவை ஒருபுறமிருக்க, இறுதிக்கட்ட யுத்தத்தின் போது, விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகளுக்கு பிரபாகரனால் வெவ்வேறு தாக்குதல் வியூகங்கள் வழங்கப்பட்டிருந்தது. அதில் கேர்ணல் தீபனை பிரபாகரன் முழுமையாக நம்பியிருந்தார். கிளிநொச்சியைக் கைப்பற்றிய காலகட்டத்தில் கேர்ணல் தீபனை புதுக்குடியிருப்புக்கு வரவழைத்துக்கொண்ட பிரபாகரன், ஆனந்தபுரத்தில் அவரது மறைவிடமொன்றில் வைத்து இப்போராட்டத்தின் தன்மை குறித்து தீபனுடன் கலந்துரையாடினார்.

பிரபாகரன் :- தம்பி எமது தளபதிகளுக்கிடையில் பல முரண்பாடுகள் இன்னமும் இருந்துகொண்டிருக்கிறது. இதனை எவ்வாறாயினும் இனங்கண்டுகொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் இலகுவில் இந்த யுத்தத்தை



**இங்கேயே புதைகுழி அமைப்போமென கேர்ணல் ரமேஷ் தனக்கு கொடுக்கப்பட்ட பணியைத் திறம்படச் செய்து வந்தார்.**

**இவ்வாறு சிறப்புத் தாக்குதல்களை நடாத்திவந்த ரமேஷ், ஏன் இராணுவத்தினரிடம் சரணடைந்தார் அல்லது ஏன் சரணடைய நேரிட்டது? கேர்ணல் ரமேஷ் கொல்லப்பட்டது முறைகேடானது என கூறும் சனல்-4, ஐக்கிய நாடுகள் சபை சதாம் ஹுசைன் தூக்கிலிடப்பட்டு கொலைசெய்ததற்கும், லிபிய ஜனாதிபதி முஹம்மர் கடாபி சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டதற்கும் ஏன் மௌனித்தன.**

போராட்டத்தில் வெற்றி தோல்வி என்பது பொதுவான விடயம். போராட்டத்தைப் பொறுத்தவரை கேர்ணல் ரமேஷ் கொல்லப்பட்டார் என்பது ஒரு சாதாரண விடயம்.

05 ஆம் பக்கம் பார்க்க...

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## தமிழகத்தின் அரட்டப்பட்ட நிலை ஈழத்தமிழர்களுக்கு வெளிச்சம் தருமா?

மிக நீண்ட காலமாகவே இனம், மொழி, கலை கலாச்சாரம் மற்றும் ஒருமித்த உணர்வு இவற்றினடிப்படையில், தமிழக மக்கள் தமது தொப்புள் கொடி உறவில் கிளைத்திருக்கின்ற இரத்த உறவாகவே, ஈழத்தமிழர்களை கண்ணோடி வந்துள்ளதென்பது வரலாறு தந்த உண்மை நிலவரம்.

ஈழத்தமிழர்களுக்கெதிராக, பேரின அரசு அவ்வவ்போது கட்டவிழ்ந்து வருகின்ற வன்முறைகளுக்கு எதிராக, தமிழகம் கொந்தளிப்பதும், கண்ணீர் விடுவதும், ஆர்ப்பாட்டங்களில் இறங்குவதும், தேவையேற்படும் போது புதுடில்லியிலும் அதிர்வுகளை ஏற்படுத்துவதும், ஈழத்தமிழர்கள் பால் அவர்கள் கொண்டுள்ள நேச உணர்வுகளின் வெளிப்பாடே.

இத்தகைய உணர்வுகளின் வெளிப்பாடுகள் காலவோட்டத்தில், ஈழத்தமிழர்களின் பால் சிங்கள அரசு மேற்கொள்ளும் வன்முறைகளின் கனதியைப் பொறுத்து, ஊர்வலம், ஆர்ப்பாட்டம், அடையாள வேலைநிறுத்தம், மறியல் போராட்டம், கடையடைப்பு, மனிதச் சங்கிலி, கையெழுத்துப் போராட்டம், அடையாள உண்ணாவிரதம், சாகும் வரையிலான உண்ணாவிரதம் என வெளிப்படுத்தப்பட்ட, உணர்வலைகள் தற்போது அதன் உச்சக்கட்டமாக நெஞ்சை உறையவைக்கும், உயிரை மாய்த்துக்கொள்ளும் கூஷகூஷதீர்வுக்கான உயிர் துறத்தல், தீக்குளித்தல் போன்ற தற்கொலைப் போராட்டங்களாக மாற்றம் பெற்றிருப்பது, ஈழத்தமிழர்களின் கண்களில் கண்ணீரை வரவழைக்கின்றது.

இத்தகைய உச்சம் பெற்ற உணர்வுகளுக்கு, அரசியல் ரீதியாக வடிவம் கொடுத்து, புதுடில்லி மத்திய அரசை ஸ்தம்பிக்கச் செய்யும் அளவுக்கு, பிரிந்து நின்று சொல்லாடற் போர் புரியும் தமிழகக் கட்சிகளான அ.தி.மு.க, தி.மு.க, சமத்துவ மக்கள் கட்சி, பாரதிய ஜனதா மாநிலக்கட்சி, ம.தி.மு.க, பா.ம.க, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பசும்பொன்தாயக அமைப்பு, நாம் தமிழர் கட்சி, திராவிடர் கழகம், இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம், விடுதலைச் சிறுத்தைகள் போன்ற தமிழகத்தின் பெரும்பாலான கட்சிகள் அனைத்தும் தமிழிய உணர்வுடன் ஒன்றிணைந்து செயற்படுவது, ஈழத்தமிழர்களை ஓரளவுக்கேனும் நிம்மதி பெறச் செய்திருக்கின்றதென்பது உண்மையே.

இப்படியான பார்வையொன்றின் வெளிப்பாடாகவே, சென்னை நுங்கம்பாக்கம் லயோலாக் கல்லூரி மாணவர் எட்டுப்பேர், இலங்கை அரசு மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடாத்தப்படல் வேண்டும், சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்தை அகற்ற வேண்டும். இலங்கை மீது பொருளாதாரத் தடையைக் அமெரிக்கா கொண்டுவர வேண்டும், உலகத் தமிழர்களைப் பாதுகாக்க தமிழக அரசு வெளியுறவுத் துறையொன்றை அமைக்க வேண்டும். இலங்கை கடற் படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும், என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்து சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர். இப்போது இந்த உண்ணாவிரதத்தில் தமிழ் நாடு தவிர்ந்த பாண்டிச்சேரி கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் அடங்கலாக, 90 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டுள்ளதாக சென்னைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறாக தமிழக அரசியற் கட்சிகள், பல்கலைக்கழக மற்றும் கல்லூரி மாணவர் சமூகம், பல்வேறுபட்ட தொழிலாளர் சங்கங்கள் அனைத்தும் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழினத்திற்கெதிராக தமிழிய உணர்வில் ஒன்றித்து, குரல் கொடுப்பது ஒருவகையில் ஈழத்தமிழருக்கு ஆறுதலாக இருந்தாலும், மறுபுறத்தில் இவ்வுணர்வுகளுடன் ஒன்றித்த போராட்டங்கள், டில்லிக் கனவான்களைத் திசைதிருப்புமா என்பது கேள்விக்குறியே. இருப்பினும் ஈழத்தமிழர்களுக்கு இத்தகைய ஒன்றுபட்ட இப்போராட்டம் ஒரு ஆறுதலாக அமையுமென்பது உண்மை. ஆனால் டில்லியின் நகர்வுகளைக் பொறுத்தே ஈழத்தமிழர்களின் விடிவு சாத்தியமாகும் என்பது மட்டும் நிதர்சனமான உண்மை.



# முற்றுப்புள்ளியிடப்பட்ட ஆயுதப்போராட்டம்

## திம்பு முதல் டோக்கியோ வரை

இந்த விவாதத்தின் இரகசியத்தன்மையின் உச்சத்தை பேணுவதற்காக நம்பிக்கையை நிலைநிறுத்தும் நோக்கில் பக்கச்சார்பற்ற நடுநிலையாளர் ஒருவரை அரசாங்கமும் புலிகளும் பயன்படுத்திக்கொள்ள முடியும் எனப் பிரேரிக்கிறேன்.

அவருக்கு ஊடாக கருத்துப்பரிமாறவும், பிரேரணைகளை முன்வைக்கவும், விளக்கம் பெறவும், செய்திகளைப்பரிமாறிக்கொள்ளவும் முடியும். இனப்பிரச்சினைக்கான அடிப்படை மூலக்கூறுகள் தொடர்பில் பரஸ்பரம் எமக்கிடையிடையே கருத்துப்பரிமாற இது உதவும்.

இவர் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவும், இம்முயற்சிகளை முன்னெடுக்கவும், அரசியல் தீர்வு கண்டடையும் வரை தேவையான வகையில் இரகசியத்தன்மையை பேணக்கூடியவராக இருப்பார். இவர் எனக்கும் அரசாங்கத்திலுள்ள ஒரு சிலருக்கும் மட்டுமே நன்கு தெரிந்தவராகவும், இத்தகையவரை வரவேற்க நீங்கள் தயாராக இருந்தால் இந்தப்பிரேரணையை நான் முன்மொழிகிறேன்.

இது தொடர்பில் ஏற்கனவே பிரான்ஸ் அரசாங்கத்தின் ஆலோசனையை நாடியுள்ளேன். ஹெய்ட்டி மற்றும் எதியோப்பியா ஆகிய நாடுகளில் பிரான்ஸ் அரசாங்கத்தின் தூதுவராக இருந்த ஃபிரான்கொய்ஸ் மைக்கேல்(குசயஉெழ ஆைைடட) என்பவரது சேவையை வழங்க பிரான்ஸ் அரசாங்கம் தயாராகவிருக்கின்றது. ஆனால் இவரது சேவையைப்பெறுவது தொடர்பில் உங்களின் சம்பிரதாய பூர்வ ஒப்புதல் அவசியமானதாக உள்ளது.

பிரான்ஸ் அரசாங்கத்தின் பிரதிநிதியாக அல்லாமல், அவர் ஒரு தனிநபராக எமக்கிடையிலான கருத்துப்பரிமாறல்களுக்கு உதவுவார். அவர் தனது தனிப்பட்ட கருத்துகள் எதையும் எம்மீது திணிப்பவராக இருக்கமாட்டார். எங்களில் ஒருவர் விரும்பும் போது அவர் தனது பணிகளை முடிவுறுத்தி விடுவார்.

தற்போது கொழும்பில் தங்கியிருக்கும் திரு.மைக்கேல் அவர்களை நான் நேரில் சந்தித்துப்பேசியுள்ளேன். நீங்கள் அவரைச்சந்திக்க விரும்பினால் அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள முடியும். திரு.மைக்கேல் பெப்ரவரி 27 வரை கொழும்பில் தங்கியிருப்பார். பெப்ரவரி 27 முதல் மார்ச் 14 வரை தனது தனிப்பட்ட அலுவல்களில் ஈடுபடுவதற்கு பிரான்ஸ் திரும்புகிறார். நீங்கள் விரும்பி அழைத்தால் பெப்ரவரி 27க்கு முன்பாக அல்லது மார்ச் 14இன் பின்னர் சந்திப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ளலாம். மிக முக்கியமான இந்த செயல்பாட்டில் இரகசியத்தன்மையைப் பேணிக்கொள்வதற்காக நீங்கள் நேரில் அவரை வரவேற்பது பொருத்தமாகவிருக்கும்."

இவ்வாசகங்களின் உள்ளடக்கத்தை பரிசீலனை செய்யும் எவரும், இனப்பிரச்சினையின் அடிப்படை மூலக்கூறுகள் தொடர்பாக மூன்றாம் தரப்பு அனுசரணையாளரின் உதவியோடு புலிகளோடு பேசுவதற்கு ஜனாதிபதி தயாராகவிருந்ததை புரிந்துகொள்ள முடியும். புலிகள் அங்கீகாரம் வழங்கியிருந்தால் அரசாங்கத்தின் தீர்வுப்பொதியுடன் யாழ்ப்பாணத்துக்கு அவர் சென்றிருக்கலாம்.

அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம். ஜனாதிபதியின் இத்தகைய ஆலோசனைக்கு புலிகள் அனுப்பிய பதில் பின்வருமாறு அமைந்திருந்தது.





"உங்களுடைய ஆலோசனைகள் தொடர்பில் நாங்கள் தீவிர கவனம் செலுத்தியுள்ளோம். அரசு தரப்பு பிரதிநிதிகளும், புலிகளும் நேரடியாக கருத்துகள் பரிமாறிக்கொள்வதே சிறப்பாகவிருக்கும். இருதரப்பு பிரதிநிதிகளும் தகுதியான பொருத்தமான நபர்களாக இருப்பார்களென நம்புகிறோம். உங்கள் பிரதிநிதிகள் உங்கள் எண்ணங்களையும், பிரேரணைகளையும் திறந்த கலந்துரையாடலில் முன்வைக்கலாம். உள்;ர் மற்றும் சர்வதேச மட்டத்தில் இந்த கலந்துரையாடல்களும், அவற்றின் முன்னேற்றங்களும் பகிரங்கப்படுத்தப்படலாம். எமது நிலைப்பாட்டை தெரியப்படுத்தியுள்ளதுடன், இந்தக்குறிப்பிட்ட காலப்பகுதியில் நடுநிலையாளர் ஒருவருக்கு ஊடான கலந்துரையாடலை நாங்கள் விரும்பவில்லை. இதனை நீங்கள் விளங்கிக்கொள்வீர்களென நம்புகிறோம்."

**-இரணியன்-**

விடயம் இத்துடன் முடிவுக்கு வந்துவிடவில்லை. பிரெஞ்சு தேச நடுநிலையாளர் ஒருவரின் பங்களிப்பை பெற, அரசாங்கம் எடுத்த முயற்சி குறித்து மிகப்பரவலான விளம்பரம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் இதனைப்புலிகள் நிராகரித்தமை பற்றியும் பேசப்பட்டது.

மார்ச் 7ம் நாளன்று லண்டனிலுள்ள புலிகளின் சர்வதேச செயலகம், புலிகளின் அரசியல் குழுவை மேற்கோள் காட்டி ஒரு செய்தியை வெளியிட்டது. இந்தச்செய்திக்கு ஆதாரமாக அமைந்தது, அதற்கு முதல் நாள் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகளுக்கு தெரிவித்த கருத்துகளாகும். "வெளிநாட்டு மத்தியஸ்த முயற்சி ஒன்றை புலிகள் மறுத்துள்ளதாக கூறப்படுவது முற்றிலும் தவறானதாகும். வெளிநாடு ஒன்றின் மத்தியஸ்தத்தை புலிகள் ஒருபோதும் நிராகரித்ததில்லை. ஆனால் வெளிநாடு ஒன்றின் பிரமுகர் ஒருவர் தனிப்பட்ட முறையில் மத்தியஸ்த முயற்சியில் ஈடுபடுவதைப்புலிகள் விரும்பவில்லை.

இந்தத் தனிநபர் பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்தவராயினும் பிரான்ஸ் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தாமல் செயல்பட முன்வருவதால் மத்தியஸ்தராக ஏற்றுக்கொள்வது சிரமமானது. அதே வேளை அவர் சந்திரிகாவுக்கு நெருக்கமான நண்பர் என்பதால் அவரது பக்கச்சார்பின்மை குறித்தும் சந்தேகம் தோன்றுகிறது." இவையே அந்தக்கருத்துகள் ஆகும்.

இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் நேரடியாகவும், வெளிப்படையாகவும் இருக்க வேண்டும். இது பிரபாகரனின் பெயரால் ஜனாதிபதிக்கு எழுதப்பட்ட கடிதம் அனுப்பப்பட்டதைத்தொடர்ந்து அன்ரன் பாலசிங்கம் தெரிவித்த கருத்து ஆகும். எமது மக்களும், சர்வதேச சமூகமும் இந்த பேச்சுவார்த்தைகள் தொடர்பாக உன்னிப்பாக கவனம் செலுத்துகின்றன எனக்குறிப்பிட்ட பாலசிங்கம் மேலும் கூறுகையில், இத்தருணத்தில் தனிப்பட்ட மூன்றாம் நபருக்கு ஊடாக கருத்துப்பரிமாறலில் ஈடுபடுவது பொருத்தமானதும் அல்ல. புத்திசாதுரியமானதும் அல்ல.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நீங்கள் நியமிக்கும் பிரதிநிதிகளோடு எமது பிரதிநிதிகள் பேசலாம். உங்கள் பிரதிநிதிகள் ஊடாக நீங்கள் விரும்பும் கருத்துகளை முன்வைக்கலாம். நாமும் அவ்வாறே செய்யலாம். இருதரப்பும் பயனுடைய வகையில் பேச்சுகளை முன்னெடுக்க முடியும்.


எமது பிரச்சினைகள் இப்போது சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இதனால் இருதரப்பு பேச்சுகள் பற்றியும் தெரிந்து கொள்ள எமது மக்கள் விருப்பமும், எதிர்பார்ப்பும் கொண்டுள்ளனர். **தொடரும்...**

சென்ற வாரத் தொடர்ச்சி...







இனக்குழு என்ற அடிப்படையில், வரலாற்று ஒடுக்குமுறைகளுக்கெதிரான அவர்களின் எதிர்ப்பிலிருந்துமே உண்மை பெறப்பட வேண்டும்.

### இது இனப்படுகொலையா?

ர.்.பேல் லெம்கின்னின் கூற்றுப்படி, 'இனப்படுகொலை என்பது ஒரு தேசத்தை அல்லது தேசிய இனத்தை அழிப்பது. பொதுவாக, இனப்படுகொலையின் அர்த்தம் ஒரு தேசத்தை உடனடியாக அழிப்பதல்ல. அதன் மக்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாக கொல்லும் போது மட்டுமே இப்படி அர்த்தம் கொள்ள முடியும்.

மாறாக இனப்படுகொலை என்பது ஒரு தேசிய மக்கள் குழுவின் வாழ்வாதாரங்களைக் குறி வைத்தழிக்கும், வெவ்வேறு நடவடிக்கைகளைக் கொண்ட திட்டமிட்ட செயல்பாட்டையே குறிக்கிறது.' 'இத்தகைய செயல்பாடுகள், ஒரு மக்கள் கூட்டத்தை முழுமையாகவோ அதன் ஒரு பகுதியையோ குறிவைக்கலாம்' என இன அழிப்புக் குற்றத்தைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான ஐக்கிய நாடுகள் சாசனம் மேலும் தெளிவுபடுத்துகிறது.

ஆகவே இனஅழிப்பு என்பதன் வரைவிலக்கணம், ஒரு மக்கள் கூட்டத்தின் பொது அடையாளத்தையும் அவர்களை முழுமையாகவோ அவர்களில் ஒரு பகுதியினரையோ அழிப்பதற்கான திட்டமிட்ட செயற்பாடுகளையும் குறிப்பிடுகிறது.

இவ்வகையில் பெருந் தொகை யாகப் பலியானவர்கள் தனிநபர் உரிமைகளைக் கொண்ட தனியாட்கள் மட்டுமல்ல, அவர்கள் குறிப்பிட்ட கூட்டு அடையாளத்தையும் கூட்டு உரிமை

2. பின் - காலனித்துவக் காலம் (1948 - 1970கள்) : சுதந்திரத்திற்குப் பின்னான அரசாங்கங்கள் அனைத்தும் ஒற்றையலகு அரசு முறையையும் அதன் சிங்கள - பௌத்தச் சித்தாந்தத்தையும் வலுப்படுத்தி நாடு முழுவதும் பண்பாட்டை ஒருமுகத் தன்மையுடையதாக ஆக்குவதை (cultural homogenization) ஆதரித்து வந்துள்ளன. தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை மறுக்கப்பட்டது.

சிங்களம் மட்டுமே அதிகாரபூர்வ மொழியாக அறிவிக்கப்பட்டுத், தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியிருப்புக்கள் அரசால் நிறுவப்பட்டன. இந்த முப்பதாண்டுக் காலத்தில் தமிழ் எதிர்ப்பு இயக்கங்கள் காந்திய வழிகளைத் தழுவின.

எனினும் இந்தச் சாத்வீக எதிர்ப்புக்கள், சிங்கள இனவாதக் குழுக்களாலும் அரசு படைகளாலும் கோரமாகத் தாக்கப்பட்டன. இந்த இனவாதத் தாக்குதல்களால் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டும் காணாமல் போயுள்ளபோதும், யாரும் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை.

3. இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இராணுவப் போராட்ட காலம் (1970கள் - 2002) : காலணித்துவத்திற்குப் பிந்திய முதல் முப்பதாண்டுக் காலத்தில் தமிழ் எதிர்ப்பின் முக்கிய கோரிக்கை, அரசு அலகுக்குள் சம உரிமையுள்ளவர்களாகத் தமிழர்கள் உள்வாங்கப்பட வேண்டும் என்பதே. எனினும் தமிழர்களின் சம உரிமைக் கோரிக்கை ஒடுக்கப்பட்டதன் விளைவாக 1970களின் பின்னர் ஆயுதந்தரித்த தேசியவாத இயக்கம் ஒன்று விடுதலைப் புலிகளின் தலைமையில் உருவானது.

கொடுமைகளுக்குப் பொறுப்பான உள்நாட்டுக் குற்றவாளியான இலங்கை அரசின் (இதில் சர்வதேசக் குற்றவாளிக்கும் பங்குண்டு) வெளிப்படையான கதையாடல், ஒற்றையலகு அரசையும் பண்பாட்டு ஒருமுகப்படுத்தலையும் ஆதரிக்கும் சிங்களப் பௌத்தத் தேசியவாதத்தையும் உள்ளடக்கியது.

தமிழ்த் தேசிய இனத்தை அழிக்கின்ற நோக்கத்திற்கு உந்துகையாக இருக்கும் ஒற்றையலகு அரசையும், சிங்களப் பௌத்த சித்தாந்தத்தையும் பாதுகாக்க வேண்டும் என்னும் அவாவே. இந்த வகையில், வெளிப்படையான கதையாடல்களின் பின்னிருக்கும் நோக்கம், இலங்கை அரசின் இனவழிப்பு நோக்கத்தை நிறுவுகிறது.

### வரலாற்று நோக்கில் உந்துகையும் நோக்கமும்

சிங்கள பௌத்த தேசியவாதத்தின் தந்தையான அநகாரிக தர்மபாலா, 1910களில் சிறுபான்மையினருக்கு எதிரான உணர்வுகளையும் வன்முறையையும் தூண்டினார். 1915இல் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையில் ஈடுபட்ட சிங்களத் தலைவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்துக் காலணித்துவ அரசுக்கு அவர் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி பின்வருமாறு அமைந்தது.

'பிரித்தானிய அதிகாரிகள் சிங்களவர்களைச் சுட்டாலும், தூக்கிலிட்டாலும், அடைத்து வைத்தாலும், கைது செய்தாலும், என்ன செய்தாலும் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே மனக்கசப்பு எப்போதும் இருந்துகொண்டேயிருக்கும். எனினும் பிரித்தானிய முடிக்கான எனது விசுவாசம் எப்போதும் அசைக்க முடியாதது' எனக் கூறினார்.

# சனல் -4 காட்சிகள் உண்மைக்குப் புறம்பானவையா?

டப்ளின் தீர்ப்பாயத்திற்குக் கட்டுப்படச் சட்டக்கட்டுப்பாடு இல்லையெனினும், அறக்கட்டுப்பாடு உண்டு. இது உண்மைக்கும், நீதிக்குமான செம்மையான அரசியல் எடுத்துரைப்புக்களை மேற் கொள்வதற்கான வெளியை உருவாக்கும்.

இருந்தாலும், போர்க் குற்றங்கள், மானிடத் திற்கெதிரான குற்றங்கள் ஆகிய சட்ட அடிப்படையிலான வகைப்பாடுகள் இலங்கையின் இனமுரண்பாடு பற்றிய வரலாற்றை ஆராயாமலேயே பிரயோகிக்கப்பட்டுள்ளன. சிங்களப் பௌத்த தேசியவாதம் (இனச்சார்பும், மதச்சார்பும் உடையது) , தமிழ்த்தேசிய வாதம் (இனச்சார்புடையது, மதச்சார்பற்றது) ஆகிய, இனமுரண்பாட்டின் இரண்டு முக்கிய கதையாடல்களின் தன்மை பற்றிய எந்தத் துருவல்களும் காணப்படவில்லை.

இந்தச் சட்டவகைப்பாடுகள் இலங்கையின் வன் கொடுமைகளை விளங்கிக் கொள்வதற்கு அவசியமான முதல் நிலைகளாக இருந்தாலும், அவை முரண்பாட்டின் விசாலத்தைப் போதுமானவளவு பிரதிபலிக்கவில்லை. அதன் பயனாக, நீதி வழங்கலையும் புனரமைப்பு முறையையும் அவை பாதிக்கின்றன. ஆகவே இலங்கையில் இடம்பெற்ற வன்கொடுமைகள் பற்றிய அரசியல் சிந்தனைகளை வரலாற்று அடிப்படையில் அணுகவேண்டியது முக்கியம். இதன் அர்த்தம் பாதிக்கப்பட்டவர்களின் நோக்கிலிருந்தும் தனித்துவமான தேசிய

களையும் கொண்டவர்களும் கூட. இலங்கை அரசின் நோக்கத்தையும், செயல்பாடுகளையும் வரலாற்று நோக்கில் ஆராயும் போது, தமிழ் மக்களுக்கெதிராக முன்னெடுக்கப்பட்ட இன அழிப்புப் படிமுறை தெளிவாகிறது. கொள்கை அறிவிப்புக்கள், கட்டளைகள், செயல்பாடுகளால் விரிவாக்கப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட, திட்டமிட்ட செயல்திட்டம் வரலாற்றுப் பின்னணியில் புலனாகிறது.

**– இரணியன் –**

போரின் இறுதிக்கட்டத்தின் மீதே இதுவரை முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (2009 ஜனவரி முதல் மே வரை). ஆனால் நோக்கம் என்ற விடயத்தை வரலாற்று ரீதியாக ஆராயும்போது, இலங்கை இனப்பிரச்சினையின் நான்கு முக்கிய காலகட்டங்கள் வெளிப்படுகின்றன. இவையின்றி, இறுதிக்கட்டப் போரின் இன அழிப்பு நோக்கம் தெளிவுபடாது.

1. காலனித்துவக் காலம் (1948 வரை): இலங்கை ஒற்றையலகு அரசாங்கப் பிரதிநிதியாகக் காலனித்துவ ஆட்சியாளர்களால் கட்டியெழுப்பப்பட்டு, சிங்களப் பெரும்பான்மையின் ஆட்சி நிறுவப்படுகிறது. இலங்கையில் இனவாதத்தின் தொடக்கம் இதுதான். அது தமிழ் திராவிடப் பண்பாட்டைவிட ஆரிய இனம் உன்னதமானது என்ற இந்தோ - ஐரோப்பியப் புனைவிலிருந்து ஊட்டம் பெறுகிறது.

அதற்கு ஜூலை 1983 திருப்புமுனையாக அமைந்தது. அதில் அதிகாரபூர்வத் தரவுகளின்படி 3000க்கும் அதிகமான தமிழர்கள் - அரசு படைகள், காவல் படை, அரசு அதிகாரிகள், ஆகியோரின் ஆதரவுடன் - சிங்கள இனவாதக் குழுக்களால் கொல்லப்பட்டார்கள்.

2002 வரையான போரில் குறைந்தது 2,15,000 பேர் கொல்லப்பட்டார்கள் என்றும், இவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள் என்றும் பிரித்தானிய மருத்துவ ஏடு ஒன்று கூறுகிறது. ஒன்றரை மில்லியனுக்கு அதிகமானவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர் என வெவ்வேறு கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

4. போர் நிறுத்த காலம் (2002-2006) : போரில் ஈடுபட்டிருந்த இரு சாராரும் சமவலிமை பெற்றதன் விளைவாக, இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் போர் நிறுத்த ஒப்பந்தமும், சமாதான முயற்சிகளும் நடைமுறைக்கு வந்தன. ஒக்டோபர் 2006இல் தொடங்கிய போரின் இறுதி அங்கம், மேலும் ஒருமுறை கோர வன்முறைக்கும் பெருந்தொகையான பொதுமக்கள் உயிரிழப்புக்கும் வழிகோலியது.

நோக்கம் என்பது தனிநபரின் உளவியல் நிலை எனப் பார்க்கப்பட்டாலும், வெளிப்படையான பொதுமக்கள் கதையாடல்கள் தனிநபரின் நோக்கத்தையும் கூட்டு நோக்கையும் ஒன்றிணைக்கின்றன.

இலங்கையில் வன்







05 ஆம் பக்கம் பார்க்க ...



# முல்லையில் தமிழரின் இருப்பை இல்லாதொழிக்க தீவிர முயற்சி

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தமது பூர்வீக கிராமங்களான, கொக்குத் தொடுவாய், நாயாறு பகுதிகள் சிங்களக் குடும்பங்களால் ஆக்கிரமிக்கப்பட்டு அதன் பெயர்களும் மாற்றப்பட்டுள்ள நிலையில், முள்ளியவளைப் பகுதியில் தமது சொந்தக் கிராமத்தில் வாழ்ந்து வரும் தமிழ்க் குடும்பங்களை, பலாத்காரமாக வெளியேற்றிவிட்டு அப்பிரதேசங்களை ஆக்கிரமிக்க அமைச்சரொருவரின் பின்னணியில், அவரின் ஆதரவாளர்கள் மிரட்டுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கியத்துவமிக்க பல பகுதிகளில், வேறு இனத்தவர்களைக் குடியேற்றும் முயற்சிகள் மிக மும்முரமாக முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், அதன் ஒரு கட்டமாகவே தமது பூர்வீக இடங்களில் வாழும் தமிழ் மக்களை, பலவந்தமாக வெளியேற்றி விட்டு வேறு இனத்தவர்களைக் குடியேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கும் இம்மக்கள் மேலும் கூறியதாவது:

கொக்குத் தொடுவாய், நாயாறு பகுதிகளில் நாம் பூர்வீகமாக வாழ்ந்து வந்தோம். 1983 ஆம் ஆண்டு டிசம்பர் 23 ஆம் திகதி அங்கிருந்து இடம்பெயர்ந்தோம். பல வருடகாலமாக அப்பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருந்த நிலையில், இப்போது நாம் மீள்குடியேறச் சென்றால், அங்கு எமது காணிகளில் வேறு இனத்தவர்கள் குடியேற்றப்பட்டுள்ளதுடன், அக் கிராமங்களின் பெயர்களும் மாற்றப்பட்டுள்ளன.

கொக்குத் தொடுவாயில் முன்னர் ஆரம்ப காலத்தில், மீன்பிடியில் ஈடுபட்டு வந்த 28 சிங்களக் குடும்பங்களே இருந்தன. தற்போது 225 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

கொக்குத் தொடுவாயில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான முந்திரியங்குளம் என்றழைக்கப்படும் உத்திராயன்குளம், ஆமையன் குளம், சின்னக்குளம், கூடமாடிக்கண்டல், நாயடிச்சமுறிப்பு, எரிஞ்ச காடு போன்ற பல பகுதிகளும், தமிழர்களுக்குச் சொந்தமான வயல்நிலங்களும், வெலிஓயாத் திட்டத்தின் கீழ் சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தற்போது எங்களுடைய இடத்தில் எம்மைக் காலடி வைக்கக்கூட அனுமதிக்கின்றார்கள் இல்லை. இப்போது எம்மை வெற்றுக் காணிகளில் குடியேற்றியுள்ளனர்.

இவை வெறும் மணல் காணிகள், எவ்வித பயிர்ச் செய்கைகளையும் செய்ய

**- ஆகாஷ் -**

முடியாது. எமது காணிகளுக்கான உறுதிப்பத்திரங்கள் கூட எம்மிடம் உள்ளன. அந்த ஆதாரத்தை குடியேறியுள்ளோரும், அதிகாரிகளும் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்.

இது தொடர்பில் அரச அதிபர் உட்பட பலதரப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றபோதும், எவருமே அதைக் கவனத்தில் எடுக்கவில்லை. எனவே பொதுநலன் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதேபோன்று முள்ளியவளை மத்தியில், தமது பூர்வீக இடங்களில் வாழ்ந்து வரும் 60க்கு மேற்பட்ட தமிழ்க் குடும்பங்களை, அங்கிருந்து பலவந்தமாக வெளியேற்ற, வட பகுதி அமைச்சர் ஒருவரின் பின்னணியில், அவரின் ஆதரவாளர்கள் முயற்சிக்கின்றனர்.

வவுனியா நெடுங்கேணி இணைப்பு வீதியில் உள்ள, கரட்டக்காடு பகுதியிலும் 1425 சகோதர இனக் குடும்பங்களை குடியேற்ற முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இவை தொடர்பில் எமக்கு நீதி கிடைக்காது விட்டால் நாம் போராடுவோம். நாம் இனவாதிகளோ, மத வாதிகளோ அல்ல. மிக நீண்ட காலமாக இப்பகுதியில் நிரந்தரமாக வசித்து வந்த, வசித்து வருகின்ற மக்களாகும். எமக்குரிய காணிகள் எங்களுக்கு மீண்டும் வழங்கப்படல் வேண்டும். இதுவே எமது கோரிக்கையாகும். என அப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முஸ்லீம் மக்களுக்குச் சொந்தமான காணிகளும் உள்ளன. அதில் சகோதர முஸ்லிம் குடும்பங்கள் மீளக் குடியேற்றப்படுவதை நாம் வரவேற்கின்றோம்.

அதனை யாராவது தடுத்தால் அதனை தட்டிக் கேட்கவும் நாம் தயாராகவுள்ளோம். ஆனால் அதற்காக எமது பூர்வீக இடங்களைப் பலாத்காரமாக பறித்து அங்கு வேறு இனங்களைக் குடியேற்ற அனுமதிக்க மாட்டோம் எனத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அரசாங்கம், மற்றும் காணி மீள்குடியேற்ற அமைச்சும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பிரதேச மக்கள் அரசைக் கோரி நிற்கின்றனர்.

---

## 2ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஆனால் அவருடைய போராட்ட வரலாற்றில் எதிரியுடனான வெற்றிகளைப் பார்க்கும்போது, கருணா அம்மானுக்கு அடுத்த படியாக ஒரு வீரத்தமிழனாக செயற்பட்டு, எதிரியின் கையில் சிக்கி தன்னையும் இந்தப்போராட்டத்திற்காக அர்ப்பணித்துக்கொண்டார் என்பதில் தமிழினம் பெருமையடைந்துகொள்ளும். ஆனால் போராட்டத்தின் போது கொல்லப்பட்ட பொதுமக்கள் தொடர்பில், ஐக்கிய நாடுகள் சபை கவனத்தில் கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது.

அதற்காக ஒரு தீர்வுத்திட்டத்தையே இலங்கை வாழ் தமிழ் மக்களும் எதிர்பார்க்கின்றனர். தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடியவர்கள்,தமிழீழ விடுதலைப் புலிகள் தான் என்று பார்க்கின்றபோது, இராணுவத்தினருக்கு அல்லது இலங்கை அரசுக்கு ஒட்டுமொத்த எதிரியாகவே இருப்பார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. மஹிந்த ராஜபக்சவினால் இனஒழிப்பே மேற்கொள்ளப்பட்டது என, இரட்டை வேடம் போட்டுக்கொண்ட இந்தியா அரசு உட்பட பல நாடுகளின் கண்மூடிய மௌனம், இன்று சர்வதேசத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் பிரபாகரன் தன்னுடைய போராட்டத்தின் விளைவாலேயே இன்று தமிழினம் ஓர் அளவிற்கு தலைநிமிர்ந்து நிற்கின்றது என்று சொன்னால் அது மிகையற்றதொன்றாகும்.

பிரபாகரனைப்பொறுத்தவரையில் அவருடைய கொள்கையிலிருந்து சற்றும் தளரவில்லை. ஆயுதமேந்திய தனக்கு, ஆயுதத்தினாலேயே முடிவு என்று தீர்மானித்துக்கொண்டார். ஆனால் சரணடைந்த தளபதிகளை இராணுவத்தினர் சித்திரவதைக்குட்படுத்தியே கொன்றார்கள் என்பது, உலகளாவிய ரீதியில் மனித உரிமைகளை மீறும் செயலாகும். அதற்கு இலங்கை அரசு வகைசொல்லியே ஆகவேண்டும். ஆனால் விடுதலைப்புலிகளின் ஒரு சில முக்கிய தளபதிகள், மர்மமான முறையில் அல்லது சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டார்கள் என்பது உண்மை அதேபோன்று இராணுவத்திலுள்ள முக்கிய கேர்ணல் தரத்திலுள்ளவர்களும், மர்மமான முறையில் கொலைசெய்யப்பட்டார்கள் என்பதும் உண்மையான விடயம்.

ஆனால் பல தளபதிகள் இன்னமும் சித்திரவதை முகாம்களில், மறைமுகமான வகையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவல் பலரையும் ஆச்சரியத்திற்குட்படுத்தியுள்ள. அதே நேரம் ஏன் அவர்கள் இன்னமும் அவ்வாறான நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. அதேநேரம் இவ்வாறானவர்களை வெளிவிடுவதினால், காலப்போக்கில் இன்னுமொரு ஆயுதப் போராட்டத்தை உருவாக்கிவிடுவார்களோ என்ற சந்தேகத்தின் அடிப்படையில், இவர்களை இராணுவப் புலனாய்வினர் தடுத்து வைத்துள்ளார்கள் என்றாலும் இதுவும் ஒரு போராட்டஉத்திதான்.

இங்கு முக்கிய தளபதிகளில் விடுதலைப்புலிகளினுடைய தரப்பில் ஒரு தளபதியாக வரவேண்டுமாயின் பல சண்டைகளில் ஈடுபட்டிருக்கவேண்டும். பல இராணுவ உயிரிழப்புக்களை ஏற்படுத்தியிருக்கவேண்டும். அவ்வறான நிலையில் விடுதலைப்புலிகள் மற்றும் இராணுவத்தினர் மனிதாபிமானமற்ற முறையில் செயற்பட்டிருப்பார்கள் என்று சொல்விக்கொள்வதில் எந்தவித சந்தேகமுமில்லை.

## 4ஆம் பக்கத் தொடர்ச்சி...



1930களில் முன்னணிச் சிங்களத் தொழிற்சங்கத் தலைவரான ஏ.ஈ குணசிங்க அவரது கட்சியால் ‘சிங்கம்’ என அழைக்கப்பட்டார். அதன் அதிகாரபூர்வ ஏடு ஹிட்லரின் முன்னுதாரணத்தைப் பின்பற்றி, கலப்பு மணங்களைத் தவிர்த்துச் சிங்கள இரத்தத்தின் தூய்மையைப் பேண வேண்டிதன் தேவையை வலியுறுத்தியது.

ஜெர்மனியில் ஜெர்மன் ஆரிய இனத்தைப் பாதுகாக்க யூத எதிர்ப்புணர்வு தூண்டப்பட்ட வேளையில், இலங்கையில் சிங்கள ஆரிய இனத்தைப் பாதுகாக்கத் திராவிட எதிர்ப்புக் கொள்கை சிலாகிக்கப்பட்டது. இனவாதமயப்படுத்தப்பட்ட சிங்கள அடையாளம், குறிப்பாகப் பாட்டாளி மக்கள் மத்தியில் வலிந்து புகுத்தப்பட, அது இந்தியப் புலம்பெயர் தொழிலாளர்கள் மீதான தாக்குதல்களுக்கு வழிவகுத்தது.

தேசத்தின் தந்தையாகக் கருதப்படுபவரும் 1948இல் சுதந்திர இலங்கையின் முதல் பிரதமராகப் பதவி வகித்தவருமான டி.எஸ் சேனாநாயக்கா 1939இல் இவ்வாறு கூறினார் ‘நாங்கள் ஒரே இரத்தம். ஒரே தேசிய இனம். நாங்களே தெரிந்தெடுக்கப்பட்ட மக்கள். தனது மதம் 5500 ஆண்டுகள் நிலைக்குமெனப் புத்த பகவான் சொன்னார். அதன் அர்த்தம், அந்த மதத்தின் பாதுகாவலர்களான நாங்கள், நீடூழி வாழ்வோம் என்பதுதான்.

1956 இல் சிங்களம் மட்டுமே தேசிய மொழியென வகுத்த எஸ். டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா 1939இல் பின்வருமாறு கூறினார். ‘எனது சிங்களச் சமூகததிற்காக நான் உயிரைத் தியாகம் செய்யவும் தயாராக உள்ளேன். எங்கள் வளர்ச்சியைச் யாரும் தடுக்க முற்பட்டால் அவர்களால் மறக்க முடியாத வகையில் அவர்களுக்குப் பாடம் புகட்ட நான் தீர்மானித்துள்ளேன் எனக் கூறினார்.

இந்தக் கலவரங்களில் பெரும்பாலானவை ஒடுக்குதல்களுக்கு எதிராகத் தமிழர்களால் முன்னெடுக்கப்பட்ட சாத்வீக ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராகத் தூண்டப்பட்டன. 1958இல் இடம்பெற்ற தமிழர்களுக்கெதிரான கலவரத்திற்குப் பின் இலங்கைச் சிறுபான்மைச் தமிழர்களை மேலும் இழிவு படுத்துவது இனவாதம் தொனிக்கும் வகையில் அமைந்த சிங்களத் தலைமைகளின் கருத்துக்கள், சிறகள சிங்கள பௌத்த தேசிய வாதம் பிரவாகம் எடுக்கும் தொனியில் அமைந்திருந்தன என்றே கூறவேண்டும்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமான ஆயுதப போராட்ட காலத்தில் தமிழர்களின் எதிர்ப்பியக்கம் பிரிவினைவாதத்தை முன்வைக்கும் ஆயுதஇயக்கமாக மாற்றமுற இலங்கையின் முதல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்த்தன (1978-1988) இவ்வாறு கூறினார்.

# ஜெனிவா மனித உரிமைகள் மகாநாடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும்

கடந்த பல வருடங்களாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்கான உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில் குரல் எழுப்பி வருகின்றனர். இருப்பினும் இந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதை சாதிக்க முடிந்தது? ஏன் சாதிக்க முடியவில்லை? என்று சிந்திக்கும் அளவிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடுகள் ஓரங்கட்டப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இலங்கை வாழ் தமிழர் தொடர்பிலும் அல்லது தமிழ்பேசும் மக்கள் தொடர்பிலும் இன்றைய காலகட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே குரல் எழுப்ப வேண்டிய நிலைப்பாட்டிற்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பாராளுமன்றத்தில் கதிரைகளை நிரப்பும் வகையில் இவர்கள் செயற்பட்டு வருகின்றனர் என்பதை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஏற்கனவே இருந்து தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்தவர்களின் குரல்வளை நசுக்கப்பட்டு சுட்டுக் கொலை செய்யப்பட்டார்கள் என்பது தான் உண்மை நிலவரம்.

தமிழர் தரப்பை தென்னாபிரிக்க அரசு விழாவுக்கு அழைத்திருந்தது.





இது இராஜதந்திர மட்டத்தில் ஒரு பெரிய வெற்றியாகும். அதே சமயம் சிறிலங்கா அரசு கலந்து கொள்ளாதது, அது அடைந்த மிகப் பெரிய இராஜதந்திரத் தோல்வியாகும்.

தமிழர்களுடைய அடிப்படை உரிமைகளை, சிங்கள - பௌத்த மேலாண்மைச் சிந்தனையில் மூழ்கியிருக்கும் மஹிந்தவின் அரசு தானாக முன்வந்து கொடுக்கும் என்பது பகற் கனவு. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, மஹிந்த ராஜபக்ச அரசு இரண்டுக்குமிடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தை, அதற்கு நல்ல எடுத்துக்காட்டு. உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதை போல, இனச்சிக்கலுக்கான தீர்வு 13+ என்ற நிலையிலிருந்து 13- என மஹிந்த அரசு படியிறங்கியுள்ளது. போரில் வென்றவர்கள் வரலாற்றை எழுதுகிறார்கள் என்பார்கள். அந்த மனப்போக்கில் தான் மஹிந்த இராஜபக்ச அரசு மூழ்குண்டு இருக்கிறது.

போரில் தாம் வெற்றி பெற்றுவிட்டதால் இனச்சிக்கலுக்கு அதிகாரப்பகிர்வு தேவையில்லை என்று கோத்தபாயவும், சிறிலங்காவின் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பிரிவினைக்கு இடமில்லை. எல்லோரும் ஒரு தாய் பிள்ளைகள் என்று மஹிந்த கூறிவருகிறார்கள்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவரான குணதாச அமரசேகர நடத்திய சிறப்பு ஊடக வியலாளர் மாநாட்டில் இந்திய வெளிவுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா மட்டுமல்ல அமெரிக்க ஆட்சித்தலைவர் பராக் ஒபாமா வந்தாலும், இலங்கையில் அதிகாரப் பகிர்விற்கு இடமில்லை. அத்துடன் 13வது திருத்தச் சட்டத்திலிருந்து காவல்துறை மற்றும் காணி அதிகாரங்களை இல்லதொழிக்க விரைவில் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசிற்குள் 60வீதமானோர் சூழ்ச்சிக்காரர்களே உள்ளனர். இன்று நாட்டைப் பாரிய நெருக்கடிக்குள்த் தள்ளிவிட, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்படப், பல சக்திகள் செயற்படுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசு தடை செய்ய வேண்டும்.' என்று கேட்டார். 13வது திருத்தச் சட்டத்தை மையப்படுத்தி அனைத்துலக நாடுகள் அழுத்தம் கொடுக்க ஆரம்பித்துள்ளன என்றார்.

இந்தப் பின்னணியில் அனைத்துலக சமூகத்தின் அழுத்தம் மட்டுமே, ஓரளவாவது மஹிந்த ராஜபக்ச அரசை வழிக்குக் கொண்டுவர முடியும். கடந்த டிசம்பர் மாதம், 25நாள் இந்தியாவின் வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் விஷ்ணுப் பிரகாஷ் நல்லிணக்க ஆணையத்தின் அறிக்கை பற்றிக் குறிப்பிடும் போது, 'சிறிலங்கா அரசு 13ஆவது சட்டத்திருத்தத்துக்கு அப்பால் சென்று தேசிய இணக்கப்பாட்டுக்குப் பொருள் பொதிந்த அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப் படுத்த வேண்டும். அதற்கான நல்ல வாய்ப்பு இப்போது கிடைத்துள்ளது' என்றார். மேலும் பேசும் போது இனச்சிக்கலுக்கான மூலகாரணத்தைக் களைவதற்கு ஒரு அரசியல் தீர்வு தேவை என்பதை இந்தியா அடையாளம் கண்டுள்ளது. அதனை நாம் சிறிலங்கா அரசுக்குத் தெரிவித்துள்ளோம். ஒரு அரசியல் தீர்வை எட்டுவதற்கு சிறிலங்கா அரசு முக்கிய பங்கு வகிக்க வேண்டும். இதனை புரிந்து கொண்டு உறுதியோடும் தூரநோக்கோடும் சிறிலங்கா அரசு செயல்படும் என எதிர்பார்க்கிறோம்.

**– இரணியன் –**

இனச்சிக்கலுக்கு ஒரு நியாயமான, நீதியான அரசியல் தீர்வு கட்டாயம் தேவை என்பதை இந்தியா போர்க்காலத்திலும் சரி அதற்கு முன்னரும் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறது. ஆனால் அதை மஹிந்த காதில்ப் போட்டுக்கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. அது மட்டுமல்ல உள்ளூரில் தயாரிக்கப்பட்ட அரசியல்த் தீர்வையே கைக்கொள்ளப்போவதாகவும், இதில் வெளிநாடுகளின் யோசனையோ பங்களிப்போ தேவையில்லை எனவும் மஹிந்த ராஜபக்சவும் அவரது அமைச்சர்களும் சொல்லி வருகின்றனர்.

இவை ஒருபுறமிருக்க இதையும் தாண்டி எந்தவொரு பேச்சுக்களிலும் எந்தவொரு த.தே. கூட்டமைப்பு உறுப்பினர்களும் கலந்துகொண்டு தமிழ்பேசும் மக்களின் யதார்த்தபூர்வத்தை எடுத்துரைத்தாலும் கடைசியில் விசாரணை என்ற பெயரில் அச்சுறுத்தல் நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இதனை சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் ஒருசில தமிழ்க்கட்சிகள், அதாவது அரச தரப்பிற்கு வக்காலத்து வாங்குவோர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சிதைக்கும் செயற்பாடாக களம் இறங்கியுள்ளமை, மக்கள் மத்தியில் மனவேதனையை அளிப்பதோடு, மக்கள் மீது ஆயுதப்போராட்டத்தை ஊக்குவிக்கும் செயற்பாடாகவே அமைகிறது. திம்பு முதல் டோக்கியோ வரை நடைபெற்ற பேச்சுக்களிலும் கூட இத்தகையதோர் செயற்பாடுகள் நடைபெற்று வந்தமையே, தமிழர் போராட்டத்திற்கு ஒரு அவமானத்தை ஈட்டிக்கொடுத்த செயலாக அமையப்பபெற்றது.

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் 22ஆவது அவையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துகொண்ட போதும், எந்தவித பிரயோசனமுமற்ற ஒன்றாகவே அனைத்து இலங்கைவாழ் மக்களும் பார்க்கும் ஒருநிலைக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு தள்ளப்பட்டிருக்கிறது. இதனுடைய காரணங்கள் பலவகையிலும் இருந்தாலும் கூட தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப்புலிகள் என்று இருந்த ஒரு காலகட்டம் மாறி, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று வளர்ந்துவரும் இந்தக் காலகட்டத்தில், ஏனைய தமிழ்க்கட்சிகள் ஜெனீவா பிரேரனைக்கு எதிராக தமது எதிர்ப்பைத் தெரிவிப்பது, தன்னுடைய தலையில் தானே மண்ணைவாரிப்போட்டது போல அமையப்பெறுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் பிழையானதென, அனைத்துலக நாடுகள் ஏற்றுக்கொண்டிருப்பின், ஐக்கிய நாடுகள் சபைவரையும் இலங்கைப் பிரச்சினை கொண்டுவரப்படாது போயிருக்கும். ஆனால் தத்துவார்த்த ரீதியாக புலிகளின் போராட்டம் சரியானது எனச் சர்வதேசம் ஏற்றுக் கொண்டுள்ளது. இறுதிக்கட்ட யுத்தத்தில் பிரபாகரன் மகன் பாலச்சந்திரன் சுட்டுக்கொன்றதைப் போன்று, எத்தனையோ சிறார்கள் அந்த இறுதிக்கட்ட யுத்தத்தில் பலியாகியிருப்பார்கள். இது சனல்-4 தொலைக்காட்சிக்கு தெரியாமல் இருப்பது வருந்தத்தக்கது.

வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழர்களும் சரி, இலங்கைவாழ் தமிழர்களும் சரி, புரிந்தும் புரியாமல் செயற்படுவது தமிழினத்தைக் காட்டிக்கொடுப்பதான செயலாகும். யுத்தம் முடிவுற்ற இக்காலகட்டத்தில் ஜெனீவாவில் பேச்சுக்களை இடைநிறுத்திக்கொண்டு, சர்வதேச நாடுகளின் அழுத்தங்களைக் குறைத்துக்கொண்டு மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திக்கொண்டு, தமிழ்மக்களுக்கான தீர்வுத்திட்டத்தை பெற்றுக்கொள்ள முடியும் என்பது, மஹிந்த ராஜபக்சவின் பல மேடைப்பேச்சுக்களில் இருந்து தெரியவருகின்றது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை தனது கையிலிருப்பதாக ஜனாதிபதி கூறிக்கொள்ளும் விடயம் ஒரு வேடிக்கையான விடயமாக இருந்தாலும் கூட, சர்வதேச மட்டத்தில் நம்பத்தகாத விடயமாகவே அரசதரப்பிலுள்ளவர்கள் எடுத்துரைத்துள்ளனர். ஆயுதப் போராட்டம் நிறைவுற்றுள்ள இந்த நிலையில் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை இன்னமும் உரிய முறையில் கையளிக்காதிருப்பது தமிழ் மக்கள் மத்தியில் கடும் விமர்சனத்தையே ஏற்படுத்தியிருக்கிறது. தமிழ் மக்களுக்காக இதுவரையிலும் குரல்கொடுத்த த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்ட வரலாறுகள் உள்ளநிலையில் தற்போது இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசத்தயங்குவதும் அதன் ஒரு வெளிப்பாடே.

இதற்கிடையில் மதரீதியான பாகுபாடுகளை இலங்கைக்குள் திணிக்க இருப்பது மற்றுமொரு வன்முறையைத் தோற்றுவிக்கும் செயற்பாடாகவே அமையப்பெறும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்திலிருந்து இக்காலகட்டம் வரையிலும் மந்தப் போக்கை கடைப்பிடித்திருந்னர். இதற்குரிய காரணம் விடுதலைப்புலிகள் இருந்தபோது அவர்களுடைய அச்சுறுத்தல்களாலும், அரசாங்கத்தினுடைய காலகட்டத்தில் அவர்களுடைய அச்சுறுத்தலும் ஒன்றுபட்ட இலங்கைக்குள் முஸ்லீம்கள் வாழ்வது போன்ற ஒற்றுமையை தமிழ் தரப்புக்கள் அல்லது தமிழ்க் கட்சிகள் கடைப்பிடிக்காதது வருந்தத்தக்கதொன்றாகும்.

எதிர்வரும் காலங்களில் தமிழ்மக்களாகிய நாம் ஆயுதம் ஏந்திப்போராடும் சிந்தனைகளை விட்டுவிட்டு தமிழ்மக்களுக்காக குரல்கொடுத்து வரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கரங்களைப் பலப்படுத்தி, அல்லது தமிழ் மக்களுக்கு உரிய தீர்வை பெற்றுத்தரும் சர்வதேச தரப்பாக இருந்தாலும் சரி அவர்களுடைய கரங்களையும் பலப்படுத்தி தமிழ்மக்களுக்குரிய உரிமைகளை வென்றெடுக்கும் செயற்பாடாக, தமிழ்மக்களின் நகர்வுகள் அமையப்பெற்றால் சுதந்திரமாக தமிழினம் வாழமுடியும் இல்லையேல் மற்றுமொரு முள்ளிவாய்க்கால் உருவாகிவரும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. இதைவிடுத்து கூட்டமைப்பினரை குறைசொல்வதில் எந்தவித பயனும் இல்லை. அதாவது விடுதலைப்புலிகளின் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட காலத்திலிருந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருடன் நடைபெற்ற பல்வேறு பேச்சுவார்த்தைகளிலிருந்து ஒரு பேச்சுவார்த்தையேனும் நல்லதொரு தீர்வை எட்டவில்லை என்பது மனவேதனைக்குரியவிடயம்.

தமிழ்த் தேசியத் திற்காக குரல் கொடுக்கும் குரல்வளைகள் நசுக்கப்பட்டால் எவ்வாறு அப்படிச் செயற்படுவது. இதை ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும். இதில் ஒன்றுமட்டும் உண்மை. பிரபாகரனின் 35 வருடகால போராட்டம் அல்லது தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தான் திம்பு தொடக்கம் ஜெனீவா வரையிலும் ஈழத்தமிழர்களின் பிரச்சனையைக் கொண்டு சென்றுள்ளது என்பது உண்மை. எதிர்வரும் 21 - 22 ஆம் திகதிகளில் ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் இலங்கைப்பிரச்சனை தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தீர்க்கமான முடிவை எடுத்தாலும் கூட, அங்கேயும் திரைமறைவில் காய் நகர்த்தல்கள் இடம்பெறும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

# வரலாறு பதித்த நல் முத்துக்கள்



## இந்திரா பிரியதர்ஷினி காந்தி

**சென்றவாரத் தொடர்ச்சி...**

சிறையிலிருந்த நேரு, முதலில் இதற்கு மறுப்பு தெரிவித்தார். பின்னர் காந்திஜி முதலானோரின் விருப்பத்திற்கு இணங்க, திருமணம் செய்து வைக்க உடன்பட்டார். 26, மார்ச், 1942இல் இருவரது திருமணமும் சிறப்பாக நடைபெற்றது. இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். மூத்தவர் ராஜீவ்காந்தி, இவர் 1944இல் பிறந்தார். இளையவர் சஞ்சய் காந்தி. இவர் 1946இல் பிறந்தார்.

**முத்து - 03**

இந்திரா காந்தி தேசிய காங்கிரஸில் உறுப்பினராய் 1938ஆம் ஆண்டில் சேர்ந்தார். இந்திராகாந்தி ஒரே ஒரு முறை பிரிட்டிஷ் அரசை எதிர்த்ததற்காகச் சிறைக்குச் சென்றிருக்கிறார். 1942ஆம் ஆண்டில் வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை வாசம் அனுபவித்தார். 11 செப்டம்பர் 1942 முதல் 13 மே 1943 வரை அலகாபாத்தில் உள்ள நைனி மத்திய சிறையில் சிறைவாசம் அனுபவித்தார். இந்திய சுதந்திரப்போரில் கலந்து கொண்டதற்காக, இந்த ஒரு முறை மட்டுமே இந்திராகாந்தி சிறைவாசத்தை அனுபவித்தார்.

1952ஆம் ஆண்டில் இந்தியாவின் முதலாவது பொதுத்தேர்தல் நடைபெற்றது. அப்போது ரேபரேலி எனும் தொகுதியில் மக்களவைக்குப் போட்டியிட்டார் பெரோஸ். இத்தேர்தலில் பெரோஸின் பிரச்சாரம் மக்களை மிகவும் கவர்ந்தது. பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று மக்களவை உறுப்பினராய்ப் பதவியேற்றார். இயல்பாக அவர் ஒரு பத்திரிகையாளர் என்பதால், மக்களவையில் அவரது பேச்சு பிரகாசமாய் தெளிவாய் இருந்தது. சிறந்த மக்களவை உறுப்பினர் என்ற பெருமையைப் பெற்றார். 1959ஆம் ஆண்டில் இந்திரா அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

இந்தியாவின் பிரதமராகச் சிறப்பாகச் செயலாற்றி வந்தார் திரு. லால்பகதூர் சாஸ்திரி. 1965ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தியா - பாகிஸ்தான் போரில் இந்தியா வெற்றி பெற்றது. இந்தியா பாகிஸ்தான் போருக்கு முற்றுப்புள்ளி வைத்து இருநாட்டினரிடையேயும் நல்லுறவை வளர்க்க விரும்பியது ரஷ்யா. இதன்காரணமாக அப்போதைய ரஷ்ய பிரதமர் கோஸிஜின் அவர்கள் இரு நாட்டு தலைவர்களையும் அழைத்தார். இதன்பேரில் இந்தியா சார்பாக திரு. லால்பகதூர் சாஸ்திரியும் பாகிஸ்தான் அதிபர் அயூப்கானும் தாஷ்கண்ட் நகருக்குச் சென்றார்கள். பேச்சு வார்த்தை நல்ல விதமாக முடிவடைந்து, இரு நாட்டுக்கும் இடையே சமரச ஒப்பந்தம் கையெழுத்தானது. அன்று இரவு எதிர்பாராதவிதமாக லால் பகதூர் சாஸ்திரி மாரடைப்பின் காரணமாகக் காலமானார்.

லால்பகதூர் சாஸ்திரி காலமானபோது அவருக்குப் பின்னர் அடுத்த பிரதமர் யார் என்ற கேள்வி எழுந்தது. பலரது பெயர்கள் பிரதமர் பதவிக்கு பரிசீலிக்கப்பட்டன. இறுதியில் இந்திராவுக்கும் மொரார்ஜி தேசாய்க்கும் நேரடிப்போட்டி ஏற்பட்டது. காமராஜ் தலை மையில் வாக்கெடுப்பு நடைபெற்றது. இந்த வாக்கெடுப்பில் இந்திரா அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்று இந்தியாவின் பிரதமராகப்பொறுப்பேற்றுக்கொண்டார்.

1969ஆம் வருடம் இந்திய ஜனாதிபதித்தேர்தல் தொடர்பாக, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களுக்கும் இந்திராகாந்திக்கும் பிரச்சினை எழுந்து, அது கட்சிப்பிளவில் கொண்டுபோய் விட்டது. காங்கிரஸ் கட்சியில் இந்திராவுக்கு எதிராக மூத்த தலைவர்கள் இருந்த நேரம் அது. இந்திய குடியரசுத்தலைவராக பதவி வகித்திருந்த திரு.இராதாகிருஸ்ணனின் பதவிக்காலம் முடிவடைந்தது. அடுத்த குடியரசுத்தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டபோது, காங்கிரஸ் மூத்த தலைவர்கள் திரு. சஞ்சீவரெட்டியை குடியரசுத்தலைவர் பதவிக்கு நிறுத்தினர். ஆனால் இந்திராவோ திரு.வி.வி.கிரி அவர்களை வேட்பாளராக அறிவித்தார். அவரை வெற்றி பெறச்செய்தார். ஜனாதிபதித்தேர்தலில் பிரதமர் இந்திராகாந்தியின் விருப்பப்படி வி.வி.கிரி அதிக வாக்குகளைப்பெற்று ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டார்.

இதனால் கோபமடைந்த மூத்த காங்கிரஸ் தலைவர்கள் ஒரு கூட்டம் கூடி இந்திராகாந்தியை காங்கிரஸ் கட்சியிலிருந்து விலக்கி வைப்பதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினர். இந்தப்பிரச்சினை முற்றி நவம்பர் 1969 இல் இந்திய தேசிய காங்கிரஸ் இரண்டாகப்பிரிந்தது. ஒரு பிரிவு ஸ்தாபன காங்கிரஸ் எனவும், மற்றொரு பிரிவு இந்திரா காங்கிரஸ் எனவும் அழைக்கப்பட்டது.

வங்கிகள் தனியார் வசம் இருந்த காலம் அது. இவற்றை இந்திரா அரசுடைமையாக்க விரும்பினார். 1969 ஆம் வருடம் பிரதமர் இந்திராகாந்தி இந்தியாவில் இயங்கிக்கொண்டிருந்த 14 வங்கிகளை அரசுடைமையாக்கினார். பஞ்சாப் மாநிலத்தை இரண்டாகப்பிரித்து பஞ்சாப், ஹரியானா என இரண்டு மாநிலங்களாக ஆக்கியப்பெருமை திருமதி இந்திராகாந்தியைச்சேரும்.

1970ஆம் வருடம் நடைபெற்ற தேர்தலில் கிழக்கு பாகிஸ்தானில் முஜிபுர் ரஹ்மான் பெரும்பான்மை பலத்தைப்பெற்றார். ஆனால் ஆட்சி அவரிடம் ஒப்படைக்கப்படவில்லை. மேற்கு பாகிஸ்தானிலிருந்து படைகள் அனுப்பப்பட்டு கிழக்கு பாகிஸ்தானைக்கைப்பற்ற முயற்சிகள் நடைபெற்றன. இதன் காரணமாக கிழக்கு பாகிஸ்தானிலிருந்து மக்கள் அகதிகளாக இந்தியாவுக்கு வர ஆரம்பித்தனர். இந்திரா இந்தியப்படைகளை கிழக்கு பாகிஸ்தானுக்கு ஆதரவாக அனுப்பி போரிட்டு ஆட்சியை முஜிபுர் ரஹ்மானிடம் ஒப்படைத்து அப்பகுதிக்கு பங்களாதேஸ் என்று பெயர் சூட்டி அதைச்சுதந்திர நாடாக அறிவித்தார். இந்திராகாந்தி 20 அம்சத்திட்டம் ஒன்றை செயல்படுத்தினார்.

இதே வருடத்தில் இந்திராகாந்தியை எதிர்த்துப்போட்டியிட்டுத் தோல்வியடைந்தார் இராஜ்நாராயணன். இந்திராகாந்தியின் தேர்தல் வெற்றி செல்லாது என்று அறிவிக்கக்கோரி அலகாபாத் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத்தொடுத்தார். தேர்தலில் இந்திராகாந்தி முறைகேடுகளைக் கையாண்டு வெற்றி பெற்றார் என்பதே இவரது குற்றச்சாட்டு. 12 ஜுன் 1975 ஆம் வருடம் இந்த வழக்கின் தீர்ப்பு வந்தது. இந்திராகாந்தியின் தேர்தல் வெற்றி செல்லாது என்று தீர்ப்பு சொல்லப்பட்டது. இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார் இந்திராகாந்தி. எதிர்க்கட்சித்தலைவர்கள் இந்திராகாந்தி பதவி விலக வேண்டும் என்று போராடினர். நாட்டில் கிளர்ச்சி அதிகரித்தது.

இந்திராகாந்தி மிசா எனும் சட்டத்தை அமுல்படுத்தி எதிர்க்கட்சித்தலைவர்களை சிறையில் அடைத்தார். சில வருடங்களுக்குப்பின்னர் நடைபெற்ற நாடாளுமன்றத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சி பெரும் தோல்வியை சந்தித்தது. ஜனதா கட்சி ஆட்சியை கைப்பற்றியது. இரண்டு வருடங்கள் மட்டுமே நடைபெற்ற ஜனதா கட்சி ஆட்சியில் உட்கட்சிப்பூசல்கள் அதிகரித்தன. 1980இல் மீண்டும் மீண்டும் நடைபெற்ற நாடாளுமன்றத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சி பெரும் வெற்றி பெற்றது. இந்திரா உத்தரப்பிரதேசத்தில் ரேபரேலி தொகுதியிலும் ஆந்திரப்பிரதேசத்தில் மேடக் தொகுதியிலும் ஒரே நேரத்தில் போட்டியிட்டார். இரண்டு தொகுதிகளிலும் மிக அதிக வாக்குகளைப்பெற்று வெற்றி பெற்றார். பின்னர் ரேபரேலி தொகுதியை ராஜினாமா செய்து விட்டார். இந்திராகாந்தி மீண்டும் இந்தியாவின் பிரதமரானார்.

இதற்கிடையே இந்திரா காந்திக்குப்பெரும் சோகம் ஒன்று நிகழ்ந்தது. 23 ஜுன் 1980 அன்று இந்திராகாந்தியின் இளைய மகன் சஞ்சய் காந்தி விமான விபத்தில் காலமானார். இதன்காரணமாக விமான ஓட்டியாகப்பணி புரிந்து கொண்டிருந்த தனது இரண்டாவது மகன் ராஜீவ் காந்தியை இந்திராகாந்தி அரசியலுக்கு அழைத்து வந்தார். அரசியலில் விருப்பமின்றியிருந்த ராஜீவ் காந்தி தாயின் விருப்பத்துக்கு இணங்க அரசியலில் ஆர்வம் காட்ட ஆரம்பித்தார்.

1982ஆம் வருடம் ஆசிய விளையாட்டுப்போட்டிகளை இந்தியாவில் நடத்தி, இந்தியாவின் திறமையை உலகுக்கு எடுத்துக்காட்டினார் இந்திராகாந்தி. இத்துடன் டெல்கியில் 1983, மார்ச்சில் அணிசேரா நாடுகளின் மாநாட்டை திறம்பட நடத்திக்காட்டினார்.

இந்திரா பிரான்ஸ், செக்கோஸ்லாவாக்கியா, ஹங்கேரி, ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, தென்னாபிரிக்கா, சோவியத்யூனியன், சீனா, ஜாம்பியா, எத்தியோப்பியா போன்ற நாடுகளுக்கு தனிப்பட்ட முறையிலும், பிரதமர் என்ற முறையிலும் சுற்றுப்பயணங்களை மேற்கொண்டிருக்கின்றார்.

சாதனைப் பெண்மணியாக திகழ்ந்த இந்திரா பல விதங்களில் விருதுகளாலும், பட்டங்களாலும் கௌரவிக்கப்பட்டிருக்கின்றார். 1972இல் இந்திரா, பாரத ரத்னா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். 1973இல் உலகில் சிறந்த பெண்மணி எனும் விருதினை பிரான்ஸ் நாடு இந்திராவுக்கு அளித்து கௌரவித்தது. 1976இல் அமெரிக்க விருதான மதர்ஸ் அவார்டு எனும் விருது இந்திராவுக்கு கிடைத்தது. இது மட்டுமன்றி நாட்டின் பல பல்கலைக்கழகங்கள் இந்திராவுக்கு கௌரவ மருத்துவர் பட்டம் அளித்துச்சிறப்பித்தன. 19 நவம்பர் 1984இல் இந்திய அரசு இந்திராவின் உருவம் பதித்த அஞ்சல் முத்திரையை வெளியிட்டது. புதுடெல்கி விமான நிலையத்துக்கு இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையம் என்று பெயர் சூட்டப்பட்டது.

பஞ்சாப் மாநிலத்தை இரண்டாகப்பிரித்து ஒரு பகுதிக்கு காலிஸ்தான் என்று பெயரிட வேண்டும் என்ற கோரிக்கை ஒரு பிரிவினரிடமிருந்து எழுந்தது. பஞ்சாப் மாநிலத்தில் அமைந்துள்ள பொற்கோவிலுக்குள் சீக்கியத்தீவிரவாதிகள் நுழைந்து அங்கு ஆயுதங்களைப்பதுக்கி வைத்து கலவரங்களில் ஈடுபட்டனர். இதனால் பஞ்சாப் மாநிலத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. பொற்கோவிலுக்குள் காவல்துறையினர் நுழைய மாட்டார்கள் என்ற தைரியத்தில் இவ்வாறு சீக்கியத் தீவிரவாதிகள் தீவிரவாதச்செயல்களில் ஈடுபட்டு வந்தனர். ஆனால் இந்திராகாந்தி துணிச்சலாக இந்திய இராணுவத்தை பொற்கோவிலுக்குள் அனுப்பி தீவிரவாதிகளை ஒடுக்கினார். இந்த இராணுவ நடவடிக்கையின் காரணமாக சீக்கியர்களின் புனிதத்தலமான பொற்கோவில் சில இடங்களில் சேதமடைந்தது. இது சீக்கியர்களை வெறுப்புக்கு உள்ளாக்கியது. 31 ஒக்டோபர் 1984 அன்று அன்னை இந்திராகாந்தி தனது சீக்கிய மெய்க்காப்பாளர்கள் இருவரால் சுடப்பட்டு உயிர் இழந்தார்.

**இளையபாரதி**

**உலகில் வாழ்ந்து சரித்திரம் படைத்துச் சென்ற முன்னோடிகளை வாரமொருமுறை எமது தினப்புயல் ஊடாக நாம் நினைவு கூருகிறோம்.**

# பிராந்தியச் செய்திகள்



## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் யாழ்.விஜயம்.




வடபகுதியில் மனித உரிமைகள் பேணப்படும் விதம் சமகால நிலைமைகள் சிவில் அமைப்புக்களின் செயற்பாடுகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆராய்வதற்கு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

மனித உரிமை ஆணைக்குழு ஆணையாளர் ஆனந்தராஜா தலைமையிலான இந்தக் குழுவினர் 19, 21, 22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு விஜயம் செய்யவுள்ளனர் என ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜா தெரிவித்தார். இவர்கள் மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்குகளை நடத்தவுள்ளதோடு, வடக்கின் சிவில் சமூகக் குழுக்களையும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

எதிர்வரும் . 19ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தின், லெபேரா மண்டபத்தில் சிவில் சமூக உப குழுவைச் சேர்ந்தோரை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆணையாளர் தலைமையிலான குழுவினர் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

## யாழ். மருத்துவர் மீது தாக்குதல் வாகனமும் சேதமாக்கப்பட்டது.





யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர் தாக்கப்பட்டமை தொடர்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் செவ்வாய்க்கிழமை (17.03.2013) கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி விக்கிரமராச்சி தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகில் யாழ். போதனா வைத்தியசாலை காது, மூக்கு, தொண்டை சத்திரசிகிச்சை வைத்தியர், எஸ்.பிரேமகிருஸ்ணா தாக்கப்பட்டதுடன் அவரது வாகனமும் சேதமாக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து வைத்தியரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்கள் இருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இத் தாக்குதல் சம்பவத்தின் போது வைத்தியரின் கார் கண்ணாடி உடைக்கப்பட்டுள்ளதுடன், வைத்தியரும் தாக்கப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வர்ண மழையுடன் வீழ்ந்த பொருட்கள் வேற்றுக்கிரக வாசிகளுடையது – அமெரிக்க ஆராய்ச்சியாளர்.



இலங்கையில் கடந்த வருடத்தில் பல்வேறு வர்ணங்களில் பெய்த மழையுடன் கிடைத்த அடையாளம் தெரியாத பொருட்கள் வேற்றுகிரகவாசிகளுடையவை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த பொருட்கள் தொடர்பில் அமெரிக்காவின் ஆராய்ச்சியாளரான ஜெமி வில்லிஸ் இலங்கையில் தங்கி இருந்து ஆராய்ச்சிகளை மேற் கொண்டு வந்தார். தற்போது இந்தப் பொருட்கள் உலகத்துக்கு வெளியில் வெளிக்கிரகங்களை சேர்ந்தவர்களின் வாகனங்கள் சுற்றித்திரிவதை உறுதிப்படுத்தும் வகையில் அமைவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வவுனியா, பதுளை, மொனராகலை, பொலனறுவை போன்ற பகுதிகளில் இவ்வாறு பல்வேறு வர்ணங்களில் மழை பெய்தன இது தொடர்பில் தொடர்ந்தும் ஆராய்ச்சிகள் இடம்பெறுகின்றன. அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற நில அதிர்வு சம்பவங்களின் போதும், இந்த பொருட்களும் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நற்பெட்டிமுனையில் கைக்குண்டு மீட்பு – சீறா மேற்பார்வையாளர் தகவல்

(நமது நிருபர்)

கல்முனை நற்பெட்டிமுனைப் பகுதியில் வீதி வடிகான் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளி முருகமூர்த்தி என்பவர், மண் அகழ்வின் போது, மின்கம்பமொன்றிற்கருகாமையில் வெடிக்காத நிலையில் புதைந்து வைக்கப்பட்டிருந்த கைக்குண்டொன்றை (கிரணைற்) மீட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய் (12.03.2013) காலை 9.00 மணியளவில் நடந்த இச்சம்பவம் அப்பகுதியில் பரப்பரப்பை ஏற்படுத்தியது. கல்முனை மேற்கு - நற்பெட்டிமுனை கிராமத்தில் அல்-அஸ்றா வித்தியாலயத்திற்கருகாமையில் வடிகான் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளிலேயே இக்கைக்குண்டைக் கண்டெடுத்ததாக வேலை மேற்பார்வையாளர் த.ஸ்ரீறமேஸ் தினப்புயலுக்கு தெரிவித்தார்.

சீறா அமைப்பின் வேலை மேற்பார்வையாளரான ஸ்ரீறமேஸ் இவ்விடயம் தொடர்பில் சீறா பிராந்திய பாதுகாப்பு உத்தியோகத்தர் திரு. ராஜு என்பவரிடம் இத்தகவலைத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து கல்முனைப் பொலீஸ், விஷேட அதிரடிப்படை ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்து பரிசோதனைகளை மேற்கொண்டதாகவும் தெரியவருகிறது.

## வெலிக்கடைச் சிறையில் கைதிகள் உண்ணாவிரதம்.



வெலிக்கடைச் சிறைச் சாலையில் மூன்று கைதிகள் முன்னெடுத்துவரும். உணவுத் தவிர்ப்பு போராட்டம் நான்காவது நாளாகவும் தொடர்கிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை (10.03.2013) மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட கைதியொருவர், தமக்கு விடுதலை அல்லது மரண தண்டனையை துரிதமாக நிறைவேற்றுமாறு வலியுறுத்தி, சிறைச்சாலையின் கூரை மீதேறி தமது போராட்டத்தை ஆரம்பித்தார்.

அதன்பின்னர் திங்கட்கிழமை மேலும் இரண்டு மரண தண்டனை கைதிகள், அவருக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். தற்போது ஒரு கைதிமாத்திரம் நேற்று கீழிறங்கி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் போகம்பரை சிறைக்கைதிகள் சிலரும் இவ்வாறு தமது மரண தண்டனையை துரிதமாக நிறைவேற்றக் கோரி போராட்டம் நடத்தியிருந்தனர்.


இதனிடையே வவுனியா சிறைச்சாலை புனரமைக்கப்பட்ட நிலையில், அமைச்சர் சந்திரசிறி கஜதீர தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் தமது அதிகாரிகள் மீது பலர் பலவிதமான குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதாகக் குறிப்பிட்டார். ஆனால் அவர்கள் எவ்வாறான கடினமாக தொழிலை மேற்கொண்டு வருகிறார்கள் என்று தமக்குத்தான் தெரியும் என்று அவர் கூறினார். சிறைக்கைதிகள் தப்பிச் சென்றால், அதிகாரிகள் பணிநீக்கம் செய்யப்படுகின்றீர்கள். அதனால் அவர்களும் கைதிகள் போன்று இருப்பதாக அமைச்சர் கஜதீர குறிப்பிட்டார்.

## உடல், உள கட்டமைப்பு ஆலோசனையைக் கருத்தரங்கு – அல் பஹ்ரியா பாடசாலை, கல்முனை



மாணவர்களுக்கான உடல், உள, கட்டமைப்பு ஆலோசனைக் கருத்தரங்கு, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கல்முனை அல் பஹ்ரியா பாடசாலையில் பிரதேச செயலாளர் எம்.எம் நௌபல் தலைமையில் கடந்தவாரம் நடைபெற்றது.

நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவை திணைக்களத்தின் அனுசரணையுடன், கல்முனை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், பிரதேச செயலாளர் எம்.எம் நௌபல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை அல் பஹ்ரியா பாடசாலை மாணவர்களுக்கு, மாணவர்களின் உடல், உள கட்டமைப்பு பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் கண்டறிந்து, அதற்கான ஆலோசனை வழங்கும் வகையில் இக்கருத்தரங்கு கடந்த வியாழன் (2013.03.07)நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் சரிபா ஷஜகான், பாடசாலை அதிபர் எம்.ஐ.றஸாக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.






(படமும் தகவலும் : மருதமுனை றாஸிக் நபாயிஸ்)




# சினிமா உலகம்




## டிஜிட்டலுக்கு மாறும் சிவாஜியின் மூன்று படங்கள்.



'கர்ணன், வசந்த மாளிகை' போன்ற படங்களைத் தொடர்ந்து சிவாஜியின், 'வீரபாண்டிய கட்ட பொம்மன், பாசமலர், புதிய பறவை' போன்ற படங்களும் டிஜிட்டலுக்கு மாறி வருகின்றன. ஏற்கனவே கர்ணன் டிஜிட்டலுக்கு மாற்றியமைக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் வெற்றிகரமாக ஓடியுள்ளது.

பல திரையரங்குகளில் 50 நாட்களுக்கு மேல் ஓடி வசூலிலும் சாதனை படைத்திருந்தது. இதையடுத்து 'வசந்த மாளிகை' படமும் டிஜிட்டல் சினிமாஸ்கோப்பில் புதிதாக மாற்றியமைக்கப்பட்டு திரையிடப்பட்டது. சிவாஜி ரசிகர்கள் கூட்டம் கூட்டமாக வந்து திரைப்படத்தைப் பார்வையிட்டதுடன், சிவாஜியின் கட் அவுட்களும் வைக்கப்பட்டு இனிப்பு வழங்கி மகிழ்ந்தனர் ரசிகர்கள்.

ரசிகர்களின் இவ்வரவேற்பையடுத்து 'வீரபாண்டிய கட்ட பொம்மன், பாசமலர், புதிய பறவை' போன்ற படங்களும் டிஜிட்டலில் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் 'பாசமலர்' திரைப்படம் அடுத்த மாதம் வெளிவரவுள்ளது. அதனைத் தொடர்ந்து ஏனைய படங்களும் வரவுள்ளன.

## அமெரிக்க இந்தியரைக் கரம் பிடிக்கவுள்ள நடிகை அஸின்.



அமெரிக்க இந்தியர் ஒருவரைக் காதலிப்பதாகவும், விரைவில் திருமண பந்தத்தில் இணையவுள்ளதாகவும் நடிகை அஸின் குறித்த தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. தமிழ் சினிமாவில் வெற்றிக் கொடி நாட்டிய இவர் கஜினி ஹிந்திப் படத்தின் மூலம், ஹிந்தித் திரையுலகிலும் கால் பதித்தார். அமீர்கான், சல்மான்கான் என டொப் ஹீரோக்களுடன் நடித்தவர்.

இந்நிலையில் தற்போது ஹிந்தி, தமிழ் என எந்தத் திரைப்படங்களிலும் நடிப்பதில்லை. அடிக்கடி அமெரிக்கா சென்று வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், இவர் அமெரிக்காவில் உள்ள இந்தியர் ஒருவரைக் காதலிப்பதாக கிசுகிசுக்கப்படுகிறது. மேலும் தமிழில் ஒரு பெரிய படத்தில் நடித்து விட்டு, திருமணம் செய்ய முடிவெடுத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

## வித்தியாசமான கதாபாத்திரங்களுடன் ஜி.ஐ.ஜோ2 திரைப்படம்





அமெரிக்காவில் ஜோ வகை காமிக்ஸ் கதைகள் விற்பனையில் சக்கை போடு போடுபவை. இந்த வகை காமிக்ஸ் கதைகளுக்காக வித்தியாசமான பொம்மைக் கதாபாத்திரங்கள் உருவாக்கப்படுகின்றன. அதிலும் இப்பாத்திரங்களில் உள்ள வில்லன்கள் மக்களிடையே மிகவும் பிர-பலம் பெற்றவைகள்.

இத்தகைய காமிக்ஸ் கதாபாத்திரங்களுடன் ஹொலிவூட்டின் முன்னணி நடிகர்களை நடிக்க வைத்து, அதிரடியான அறிவியல் புனைகதையை மையமாக கொண்டு இந்தப் படத்தைத் தயாரித்துள்ளனர். தீய சக்திகளிடமிருந்து இவ்வுலகையும், இவ்வுலக மக்களையும் காப்பாற்றும் வழமையான கதைதான் என்றாலும், விறுவிறுப்புக்குப் பஞ்சமிருக்காது என்று நம்பப்படுகிறது.

ப்ரூஸ் வில்லீஸ், டெவோன் ஜோன்சன் உள்ளிட்டவர்கள் இத்திரைப்படத்தில் நடிக்கிறார்கள். இந்தப் படத்தை ஜோன் எம் சூ இயக்குகிறார்.

## இளம் பெண்களுக்கு சசிகுமார் கூறும் அறிவுரை.



இயக்குனரும், நடிகருமான சசிகுமார் இப்பொழுது கவலையில் இருக்கிறார். இவர் அடுத்து எடுக்கவுள்ள படத்தில் நடிக்க வாய்ப்புத் தருவதாகக் கூறி, போலி ஈ - மெயில் முகவரிகளை வைத்தும், வலைத்தளங்களை வைத்தும் சினிமாக் கனவுகளுடன் வலம் வரும் இளம் பெண்களைச் சிலர் ஏமாற்றி வருகின்றனராம்.

இதனைக் கேள்விப்பட்ட சசிக்குமார் மிரண்டு போய் விட்டாராம். சமூக வலைத்தளங்களில் எனக்கு அக்கவுன்ட் இல்லை, என் பெயரிலான போலி வலைத்தளங்களைக் கண்டு ஏமாற வேண்டாம். நடிக, நடிகைகளைத் தேர்வு செய்ய நான் ஒருபோதும் வலைத்தளங்களில் விளம்பரம் செய்வதில்லை. புதுப்படங்களுக்கான நடிகர்களை நான் என் அலுவலகத்தில் தான் தேர்வு செய்வேன் எனக் கூறியுள்ள சசிக்குமார் "சினிமா உலகம் எந்தளவுக்கு அழகானதோ அந்தளவுக்கு ஆபத்தானதும் கூட" என புதுமுகங்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## கவிஞர்களுக்குள் கருத்து வேறுபாடு – நட்பு வட்டாரங்கள் கவலை

அன்பு,. பாசத்தைப் பற்றியும் குடும்பத்தைப் பற்றியும் மேடைகளில் கவிதை பொங்கப் பேசும், பெரிய அரசு கவிஞரின் குடும்பத்துக்குள் நடப்பது நேர்மாறான விடயங்களாம். கவிஞரும் அவரது பொன்னான மனைவியும் பல ஆண்டுகளாகப் பிரிந்து வாழ்வது, கோலிவூட்டின் கோலி சோடாவுக்குக் கூடத் தெரிந்த விடயம் தான்.

சமீம காலமாக கம்யூனிஸ்ட் தலைவர் பெயர் கொண்ட மகனுக்கும், கவிஞருக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பேசிக்கொள்வதில்லையாம். கவினரோடு இப்போது இருப்பது அவரது இளைய மகன் மட்டும் தானாம்.

அவனையும் தன்னைப் போல ஒரு பெரிய கவிஞராக்குவதுதான் அவரது கனவாம். கடலுக்கு அருகில் கடல் மாதிரி பெரிய வீடு இருக்கிறது. ஆனால் கவிஞர் ஒரு புறமும் முத்துக்கள் மறுபுறமும் இருப்பதுதான் வேதனையாக இருப்பதாகக் கவிஞரின் நட்பு வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

## என் மகளும் நடிகையாவாள் – ஷாருக்கான் நம்பிக்கை



என்னைப் போலவே என் மகள் சுஹானாவும் ஒரு நடிகையாவாள் என நம்புகிறேன். இவ்வாறு இந்திப்படவுலகின் நாயகன் ஷாருக்கான் கூறியுள்ளார். ஊடகங்களுக்கு வழங்கிய ஒரு பேட்டியின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இப்போது என் மகளுக்கு பன்னிரெண்டு வயது. இலண்டனில் படிக்கிறாள். எதிர்காலத்தில் அவள் ஒரு நடிகையானால் நான் பெருமைப்படுவேன் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் குடும்ப வாழ்க்கை குறித்த கேள்விக்குப் பதிலளிக்கும் போது எனக்கும், கெளரிக்கும் திருமணமாகி 21 வருடங்கள் ஆகிவிட்டன. எனது மனைவி குடும்பத்தை நன்கு கவனித்து வருகிறார். பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். மொத்தத்தில் அவர் ஒரு ஆச்சரியமான பெண். தவிர, என் தனிப்பட்ட வாழ்க்கை குறித்து நான் அதிகம் விமர்சிக்க விரும்பவில்லை என்று கூறினாராம் நடிகர் ஷாருக்கான்.

## திரையுலகைத் திணறவைக்கும்அகர்வால் சகோதரிகள்



தெலுங்குத் திரையுலகின் முன்னணி நடிகைகளின் பட்டியலில் ஏற்கனவே இடம்பிடித்திருக்கும் காஜல் அகர்வாலை அடுத்து இப்போது அவரின் சகோதரியான நிஸா அகர்வாலும் இப்பட்டியலில் இடம் பிடித்துள்ளார்.

தமிழில் 'இஸ்டம்' படத்தில் நடித்துள்ள நிஸா போதிய வரவேற்புக் கிடைக்காததால் தெலுங்குப் பக்கம் பிரவேசித்தார். சகோதரிகள் இருவரும் தெலுங்குத் திரைப்படங்களில் நடிப்பதால் படப்பிடிப்பு இடைவேளைகளில் இருவரும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்கிறார்கள்.

ஒரே நேரத்தில் இரு அழகு தேவதைகளையும் தரிசிப்பதில் சினிமாப் படக்குழுவினர் உற்சாகமடைகின்றனர்.

## பரதேசியில் பாலாவின் உண்மையான முகம்

ஒவ்வொரு இயக்குனரும் தங்களது படங்களை உருவாக்குவதில் எவ்வளவு உழைக்கிறார்கள் என்பதற்கு இயக்குனர் பாலா சிறந்த உதாரணம்.

வரும் 15 ஆம் திகதி வெளியாகவுள்ள பாலாவின் பரதேசி படத்தின் டீசர் ஒன்று வெளியாகியுள்ளது. அதர்வா, தன்ஷிகா, வேதிகா இணைந்துள்ள இப்படம், தேயிலை தோட்டத் தொழிலாளிகளின் வாழ்க்கையை பற்றியது.

இந்நிலையில் பரதேசி படப்பிடிப்பில் பதிவு செய்யப்பட்ட ஒரு டீசர் தற்போது வெளியாகி பரபரப்பை ஏற்படுத்துமெனத் தெரிகிறது. பாலாவின் கடின உழைப்பு, அவருடைய கோபம், ஒரு கதாப்பாத்திரத்தை வெளிக்கொணரும் விதம் என அனைத்தும் பார்ப்பவர்களை இவர் இப்படியா? என யோசிக்க வைக்கும் அளவிற்கு இருக்குமாம் என்று சொல்லப்படுகிறது.



# கவிதைப் பூங்கா



## வீரத் திருமகன்

தமிழ்த் தாயின் திருமகன்
தமிழ் மண்ணில்
பிறப்பெடுத்த
வினை தீர்க்கும் வீரமகன்
பார்வதி தமிழ்ப் பாலை
குடித்தெழுந்த முதல் மகன்

வரும் பகை
அனைத்தையும்
பொடிபென ஆக்கிட
முன்னிற்கும்
தலைமகன்
வீரம் விளை மண்ணின்
தவப்புதல்வன் - அவன்
மீண்டும் வருவானா..
காத்திருக்கிறோம்
- உன்
நினைவுகளுடன்.

த. சாருலதா
யாழ்ப்பாணம்.



## ஈழமாதா



பூவிழந்து
பொட்டிழந்து
சோலையிழந்து
மனையிழந்து
மண்ணிழந்து
உறவிழந்து
கலையிழந்து - நீ
தனிமரமாய்
நிற்கின்றாயே
அந்நியன்
வாழவைப்பான்
என்னும் எதிர்பார்ப்பிலா?
ஈழமாதாவே - உன்
சபதம்
நிச்சயம் நிறைவேறும்
ஒரு நாள்

இளையபாரதி
அம்பாறை

## நட்பிற்காக ...


உன் நட்பின்
ஞாபகத்தில் சில துளிகள்
இருவரினதும் வீட்டு எல்லைகள்
- நம்
சந்திப்பு எல்லைகள்
நான் தினம் தினம் வந்து
நிற்கின்றேன்.

உன்னை காண்பதற்கு
முடியவில்லை
சிறுவயதில் கொய்யாவில் பழம்
பறித்த
அந்த ஞாபகத்தோடு - நான்கு
ஆண்டுகள் சென்ற பின்பு -
மீண்டும்

மண்ணுக்கு வந்தபோது
உன் ஞாபகத்தோடு அந்த
மரத்தை நோக்கி
உன் நட்பில்லாமல்
விதையானதை உணர்ந்தேன்.
சின்னச் சின்னக் கைகளால்
சிறுவயதில் சின்னச் சின்னச்
சண்டையிட்ட
அந்த நாட்களை
எண்ணிப்பார்க்கிறேன்.

சில நிமிடம் பிரிவு பல மணி
ஆனந்தத்தை
அலைகள் முத்தமிடும். - அந்த
மரத்தின் மண்ணில்
விதையாகிய
அன்புள்ள நண்பன் நீ
மறக்க முடியுமா...

கோகுலன்
புது. மத்திய கல்லூரி



## அம்மா

அன்பின் உருவம்
ஆறுதலின் வடிவம்
இன்பத்தின் உறைவிடம்
ஈகையின் பிறப்பிடம்
உண்மையின் இருப்பிடம்.
ஏழ்மையின் தரிப்பிடம்.
ஏக்கத்தை தீர்ப்பவள் -
எனை
ஐயம் இன்றி
வளர்ப்பவள் - அது
ஒரேயொரு மந்திரம்.
அம்மா...

சி.ரமணன்.
புதுக்குடியிருப்பு.



## இழப்பு

ஏன் பெண்ணே!
நீசக் காற்றில் உன்
வாசம் மட்டும்
நின்றுவிடுகிறது
என்னிடத்தில்
பரிதவிக்கிறேன்
என் உயிரே
திரும்பி வர
மாட்டாயோ?
வீசி வரும் தென்றல்
நான்
சுவாசிக்க அனுமதி தர
மறுக்கிறது
நடைபிணமாம் நானும்
மிதிவண்டிப் பாதயிலே

அனு
வவுனியா

## எங்கு பார்த்தாலும்

எங்கு பார்த்தாலும் - நம்
இலங்கை நாட்டில்
எத்தனை ... எத்தனை
இயற்கை காட்சிகள்.



போலி நோட்டுகள்
போலி சான்றிதழ்கள் -
அச்சடித்து
மக்களை ஏமாற்றும்
கூட்டங்கள்.

தேசிய லொத்தர் சீட்டுகளை
விற்பனை செய்ய
எத்தனை விதமான
தமிழ் வார்த்தைகள்.

சிசுக்களை
வயிற்றுப்பசிக்காக
விற்பனை செய்யும்
தாய்மார்கள்.

பெண்ணின் தலைமுடிக்குள்
ஹெரோயின் போதைப்பொருள்
எந்த நாளும் - ஒவ்வொரு
பத்திரிகைகளிலும்
புதுமையான செய்திகள்.

மாறிவரும் - நாகரிகத்தால்
நம்நாட்டின் தலைவிதி.
மாறிடுமா? சீராகுமா?

வீ. அருள்ராஜ்.
பாடசாலை வீதி.
கொம்மாந்துறை.

என் செல்லப்பிராணி
உன்னுடன் நான்
வாழும் நாட்கள்
என் வாழ்வின்
ஆரோக்கியங்கள்.

அநாமிக்கா
ஓமந்தை


## தினப்புயலே

தமிழ் மக்களின்
மனதில்
ஈரமாய் இடம் பிடித்த
தமிழ்ப் புயலே!

புதுப் புதுச் செய்திகளால்
தமிழ் நெஞ்சங்களைக்
கவர்ந்திழுக்கும்
புதுப் புயலே!
பல்வேறு வகுப்பினரையும்
படிக்கத் தூண்டி - பின்
சிந்திக்கத்தூண்டும்.
உன்பணி தொடர
எம் உளமார்ந்த
நல்வாழ்த்துக்கள்.

சு. லூஜிதா
தட்சணாமருதமடு
பாலம்பிட்டி.






## பதவி வெற்றிடம்

எமது தினப்புயல்; பத்திரிகை நிறுவனத்திற்கு, பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படவுள்ளது. எனவே தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

உதவி ஆசிரியர்கள்.
விளம்பர சேகரிப்பாளர்.
விற்பனையாளர்.
கணனித் தொழில்நுட்பவியலாளர்.
(i) பேஜ் மேக்கர் (Page Maker)
(ii) போட்டோ சொப் (Photo Shop)
(iii) கொரல் ட்ரோவ் (Corel Draw)


சுயவிபரக் கோவையுடன், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ், பாடசாலை/கல்லூரி/பல்கலைக்கழக முதல்வரின் நற்சான்றிதழ், பாஸ்போட் அளவிலான மூன்று புகைப்படங்கள் சகிதம் நேரில் வரவும்.

தொ.இல:
071-1850885
024-7451360

இல.154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
கண்டி வீதி, வவுனியா.




# புனைகதைப் புயல்



சிறுகதை

## முள்ளிடை முகிழ்த்த மலர்...



சிறிய ரெண்டுக்குள் இருக்கும்போது பலதடவைகள் இருவர் உடல்களும் முட்டியிந்தபோதும் ஏன் அவன் அருகில் அமர்ந்த போதும் தூக்கிய போது வதனா சலனப்பட்டதில்லை. இப்போது ஏதோ சங்கடமாக இருந்தது.

மாலையாகியது. செல்லம்மாவுக்கு சங்கடமாகியது. இருவரையும் ஒன்றாக படுக்கவிட்டால் எல்லாம் பிசகிவிடும். ஏதாவது காரணம் சொல்லியே ஆகவேண்டும் என முடிவெடுத்தாள்.

கணவன் முதல் அனைவரும் சாஸ்திர சம்பிரதாயங்களை மதிப்பவர்கள் அத்துடன் வதனாவும் இந்த விடயத்தில் பயபக்தி உள்ளவள்.

**தொடர் - 03**

எனவே அதனைப் பயன்படுத்தி தன் எண்ணத்தை நிறைவேற்ற முடியும் என செல்லம்மா உறுதியாக நம்பினாள்.

"இஞ்சாருங்கப்பா."

"என்னப்பா"

"இண்டைக்கு செவ்வாய்க் கிழமையெல்லே"

"ஓ..அதுக்கென்ன."

"இல்லை.... இண்டைக்கு ராம்மாக்களை தனியவிட நல்ல நாளில்லை....அதுதான் யோசிக்கிறன்."

"ம்....... அவன்ர கலியாணத்தில ஒண்டையும் பாக்காம இண்டைக்கு ....... அவனையே.... ம் [பெருமூச்சு].....இனியாவது செய்யிறத வடிவாய் நாளைப்பாத்து செய்யவேணும்."

"ஓ..மப்பா .... தம்பிக்கும். பிள்ளைக்கும் சொல்ல வேணும். சின்னனுகள் நாங்கள் சொல்ல தப்பாய் யோசிச்சுப் போடுங்கள்."

"நீ கூப்பிடப்பா நான் சொல்லுறன்."

செல்லம்மாவின் திட்டம் கனகச்சிதமாக நிறைவேறுவதையிட்டு செல்லம்மாவுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. வெளியே மரநிழலில் இருந்த ராம்குமாரையும். ரெண்ட் வெளி நிழலில் குழந்தையுடன் விளையாடிக்கொண்டிருந்த வதனாவையும் அழைத்ததுடன். தா்ஷாவை கடைக்கு அனுப்பும் சாட்டில் அயல் வீட்டிற்கு அனுப்பி வைத்தாள்.

"அப்பா வரட்டாம்."

என அம்மா கூப்பிட்டபோது இருவரும் என்ன என அறியும் ஆவலுடன் அப்பா இருக்கும் இடம் நோக்கி சென்றனர்.

"இருங்கோ."

இருவரையும் இருக்க சொன்னவர். சற்று நேரம் அமைதியாக இருந்தார்.

"ம்...... [நீண்ட பெருமூச்சுடன் ] இரண்டு பேரும் ஒருத்தருக்கொருத்தர் புரிஞ்சு கொண்டு துணையா இருப்பியள் எண்டது தெரியும். ...ஆனா...." என்று இழுத்தவர்.

"நீங்க...நல்லா வாழ வேணும்...."

'நா' தளதளத்தது.

செல்லம்மாவிடம் வேறு கருத்துக்கள் இருந்தாலும். தற்காலிகமாக இருவரும் இணைவதை தடுக்க கணவன் கூறும் கருத்தெல்லாம் சரி யென வழி மொழிந்தாள்.

ஆனால் வதனாவுக்கு சரியான வாழ்க்கைத்துணை மட்டும் அல்ல தன் மகனின் வாரிசை வளர்க்கவும் ராமே சிறந்த துணையென அவர் நம்பினார்.

"ஓமப்பா...இப்ப நீங்க ஏன் கவலைப்படுறியள்."

"இல்லை. .. உங்கட வாழ்க்கை நல்லா வர வேணும்."

இருவரும் அமைதியாக இருந்தனர்.

**அன்னக்கிளி**

"ஆ... அவன்ர கலியாணத்தில நாள் நட்சத்திரம் ஒண்டும் பாக்காம விட்டிட்டன். அதுதான் ...அப்பிடி போச்சுதோ தெரியாது.."

எல்லோரும் அமைதியாக இருந்தனர். அவரே தொடர்ந்தார்.

"அதுதான் உங்கட விசயத்தை நல்ல சாத்திரியாரட்டை கேட்டு நல்ல நாள்ள கோயில்ல பாத்து ஏதாவது செய்து போட்டு குடும்பமாய் இருந்தா நல்லதெண்டு நினைக்கிறன்."

ராம்குமார் வதனாவைப் பார்த்தான். அவள் முகம் இருண்டு கிடந்தது. அவளது எதிர்பார்ப்புக்களில் இடி விழுந்ததாகவே நினைத்தான்.

"ஓ..மப்பா."

ராம்குமார் ஏற்றுக் கொண்டான். அது அவளுக்கு வெறுப்பை ஏற்படுத்திய போதும் ஏற்றுக்கொண்டாள்.

"நீங்க முறைப்படி வாழவேணும் கெதில நான் எங்கட ஊர் ஐயாவை சந்திச்சு கதைச்சு நாளப் பாக்கிறன்."

அவரே தொடர்ந்தார்.

"நீங்க திருமணம் செய்யாம நெருக்கமாய் இருந்தா பாக்கிற சனம் பலமாதிரியும் கதைக்கும். வாழ வேண்டிய உங்களப்பற்றி ஊரில கதைக்கிறளவுக்கு நடக்கமாட்டியள். தங்கச்சியும் வீட்டில இருக்கிறாள்."

"ஓமப்பா. நீங்க ஐயரோட கதைச்சுட்டு சொல்லுங்க."

"என்னபிள்ளை பேசாம இருக்கிறாய்."

"ஓ..ஓ ஒண்டுமில்லை."

"உங்கள் ரெண்டு பேருக்கும் சேந்து வாழிறதில பிரச்சினையில்லைத் தானே."

"ம்ம்......"

தலை குனிந்த வாறே தலை யசைத்தாள் வதனா.

"மற்றவைக்காக இல்லை உன்ரை விருப்பத்துக்காக வாழவேணும். வெள்ளண இவன் கோவத்தில எடுத்த முடிவு, உனக்கு பிடிச்சுதோ தெரியாது. தனிய இருக்கிறாய் எண்டு கட்டாயப்படுத்தெல்ல உனக்கு பிடிச்சா நான் நாள் பாக்கிறன்."

"என்ன வதனா சொல்லு பிள்ளை. இப்ப வேண்டாம் பறவால்ல யோசிச்சு சொல்லு. ராம் என்ன யோசிக்கிறாய்"

"இல்லையப்பா. அண்ணிய........ .....இல்ல.... வதனாவைக் கேட்டு செய்யுங்கோ."

சொல்லும் போது தவறி அண்ணி என்றதால், பேசமுடியாது திண்டாடினான். இப்போது ராம் அண்ணி என்று சொன்னது வதனாவுக்கு ஓங்கி அறைந்தது போல் இருந்தது. துயரம் மேலோங்க அழுதே விட்டாள்.

"பிள்ளை அழாத உன்ர கண்ணில கண்ணீர் வரக்கூடாது. எத்தின தரம் நான் கேட்டனான். என்னை அப்பாவாய் நினைச்சா உப்பிடி அழமாட்டாய். இப்ப ஏன் அழுறாய்.?"

"இவர் இவர்.. இப்ப....."

சொல்ல முடியாமல் தவித்தாள்.

"சரி விடு அப்ப நான் ஐயாவோட கதைக்கட்டோ"

"என்ன பேசாம இருந்தா..?"

"ம்....."

என்று தலையசைத்தவள் மெல்ல நிமிர்ந்தாள்.

**தொடரும்...**

சகல விதமான தையல் இயந்திரங்களையும் உங்கள் இருப்பிடங்களுக்கே வந்து சிறந்த முறையில் 3 மாத உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு
பாபு தையலகம்
0776906182
243/1, தேக்கவத்தை
வவுனியா

# ஆன்மீக உலகம்

## சிவராத்திரி விரதம்



ஒவ்வொரு மாதமும் தேய்பிறை சதுர்த்தசி இரவு, மாத சிவராத்திரி ஆகும். சிவனடியார்கள் இந்த சிவராத்திரியையும் மாதந்தோறும் தவறாமல் கடைப்பிடித்து வருகின்றனர். விரதம் அனுஷ்டிப்போர் முதல் ஒரு நாள் ஒரு பொழுது உணவருந்தி, சிவராத்திரியன்று உபவாசமாய் காலையில் குளித்து சிவ சிந்தனையுடன் கண்விழித்திருந்து, நான்கு சாமமும் வழிபாடு செய்ய வேண்டும்.

அடுத்தநாள் காலையில் தீர்த்தமாடி, சுவாமி திரிசனம் செய்து அடியாளர்களுடன் உணவருந்தி விரதத்தை நிறைவு செய்தல் வேண்டும். சிவாலயங்களில் நடைபெறும் நான்கு சாம அபிஷேக ஆராதனைகளுக்கு அவரவர் வசதிக்கேற்ப பொருள்களைக் கொடுத்து உதவலாம்.

நான்கு சாம வழிபாட்டிற்குரிய திரவியங்களாவன,

முதல்சாமம் - அபிஷேகம் - பஞ்சகவ்வியம், அலங்காரம் - வில்வம் இலை, அர்ச்சனை - தாமரைப்பூ, நிவேதனம் - பாற்சாதம், பட்டு - செம்பட்டு, தோத்திரம் - இருக்கு வேதம், சிவபுராணம், மணம் - பச்சைக் கற்பூரம், தேர்ந்த சந்தனம், புகை - சாம்பிராணி, சந்தனக் கட்டை, ஒளி - புஷ்ப தீபம்

இரண்டாம் சாமம் - அபிஷேகம் - பஞ்சாமிர்தம், அலங்காரம் - குருந்தை
அர்ச்சனை - துளசி, நிவேதனம் - பாயாசம், சர்க்கரைப் பொங்கல், பட்டு - மஞ்சள் பட்டு
தோத்திரம் - யசுர்வேதம், கீர்த்தித் திருவகவல், மணம் - அகில், சந்தணம், புகை - சாம்பிராணி, குங்குமம், ஒளி - நட்சத்திர தீபம்

மூன்றாம் சாமம் - அபிஷேகம் - தேன், பாலோதகம், அலங்காரம் - கிளுவை, விளா, அர்ச்சனை - மூன்று இதழ் வில்வம், சாதி மலர், நிவேதனம் - எள், அன்னம், பட்டு - வெண் பட்டு
தோத்திரம் - சாமவேதம், திருவண்டப்பகுதி, மணம் - கஸ்தூரி சேர்ந்த சந்தனம், புகை - மேகம், கருங்குங்கிலியம், ஒளி - ஐந்துமுக தீபம்

நான்காம் சாமம் - அபிஷேகம் - கருப்பஞ்சாறு, வாசனை நீர், அலங்காரம் - கருநொச்சி, அர்ச்சனை - நந்தியாவட்டை, நிவேதனம் - வெண்சாதம், பட்டு - நீலப்பட்டு, தோத்திரம் - அதர்வன வேதம், போற்றித்திருவகவல், மணம் - புணுகு சேர்ந்த சந்தனம், புகை - கற்பூரம், இலவங்கம், ஒளி - மூன்றுமுக தீபம்

## திருக்குர்ஆனின் பத்து கட்டளைகள்



குர் ஆனின் திருமறை வசனங்கள் 6:151-152 கீழ்க்கண்ட பத்து கட்டளைகளை அறிவிக்கின்றது:

"வாருங்கள்! உங்கள் இறைவன் உங்களுக்குத் தடைசெய்தவற்றைக் கூறுகிறேன்' என்று (முஹம்மதே) கூறுவீராக! அவை:-

1. அல்லாஹ்வுக்கு எதையும் இணையாக வைக்கக் கூடாது.

2. பெற்றோருக்கு எப்போதும் உதவியாக இருக்க வேண்டும்.

3. வறுமையின் காரணமாக உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள். உங்களுக்கும், அவர்களுக்கும் நாமே உணவளிக்கிறோம்.

4. வெட்கக்கேடான காரியங்கள் எதுவாயினும் அதை வெளிப்படையானதையும், இரகசியமானதையும் எபபோதும் நெருங்க வேண்டாம்.

5. அல்லாஹ் தடைசெய்துள்ள எவரையும், உரிமையிருந்தாலே தவிர தண்டனை நிறைவேற்றாதீர்கள். நீங்கள் புரிந்து கொள்வதற்காக இதையே உங்களுக்கு உபதேசம் செய்கிறேன். (6:151)

6. அநாதையின் செல்வத்தை அவன் பருவமடையும் வரை நியாயமான முறையிலே அன்றி, அதை (அனுபவிக்க) நெருங்காதீர்கள்.

7. அளவையையும், நிறுவையையும், நேர்மையான முறையில் நிறைவேற்றுங்கள்.

8. எவரையும் அவரது சக்திக்கு மேல் சிரமப்படுத்தாதீர்கள்.


9. உறவினராகவோ இருந்தாலும், பேசும்போது நீதியையே பேசுங்கள்.

10. அல்லாஹ்வின் ஒப்பந்தங்களை முற்றிலுமாக நிறைவேற்றுங்கள். (6:152)

இதுவே எனது நேரான வழியாகும். எனவே இதனையே பின்பற்றுங்கள். பலவழிகளைப் பின்பற்றாதீர்கள். அவை அவனது (ஒரே) வழியை விட்டும் உங்களைப் பிரித்துவிடும். நீங்கள் (இறைவனை) அஞ்சுவதற்காக இதையே அவன் உங்களுக்கு உபதேசிக்கிறான்"

இப்புனித திருக்குர்ஆனின் பத்துக் கட்டளைகளையும் தவறாமல் தனது வாழ்நாளில் முற்றிலுமாகக் கடைப்பிடித்து வாழ்பவனே ஒரு உண்மையான முஸ்லிமாவான்.

## இயேசுவின் மலைப்பிரசங்கம்



நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில் நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கின்ற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள். நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கின்ற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.

நீ உன் கண்ணிலிருக்கிற உக்கிரத்தை உணராமல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? இதோ உன் கண்ணில் உக்கிரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி : நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப்போடுகிறேன் என்று நீ சொல்வதெப்படி? மாயக்காரனே? முன்பு உன் கண்ணிலிருக்கிற உக்கிரத்தை எடுத்துப் போடு, பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகை பார்.

பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள். உங்கள முத்துக்களை பன்றிகளுக்கு முன் போடாதேயுங்கள். போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்.

கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள் அப்பொழுது நீங்கள் கண்டடைவீர்கள். உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்கு கல்லைக் கொடுப்பானா? மீனைக்கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா?

ஆகையால் பொல்லாதவர்களாகிய நீங்கள், உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? ஆதலால் மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறார்களோ, அவைகளை நீங்களும் பிறருக்குச் செய்யுங்கள். இதுவே நியாயப் பிரமாணமும் தீர்க்க தரிசனங்களுமாம்.

இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள். கேற்றுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அனேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிப்பவர்கள் சிலர் கள்ளத் தீர்க்க தரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் அவர்கள் ஆட்டுத் தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்.

உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். அவர்களுடைய கனிகளாலே அவர்களை அறிவீர்கள்.

முட்செடிகளில் திராட்சைப் பழங்களையும், முட்பூண்டுகளையும் அத்திப் பழங்களையும் பறிக்கிறார்களா? அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும், கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும்.

நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது அதேபோன்று, கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது. நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும். ஆதலால் அவர்களுடைய கனிகளாலே அவர்களை அறிவீர்கள்.

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தப்படி செய்கிறவனே பரலோகராஜியத்துள் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன், அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அனேகர் என்னை நோக்கி, கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்க தரிசனம் உரைத்தோம் அல்லவா?

உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அனேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமக்காரர்களே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.

ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன் மலையின்மேல் தன் வீட்டைக்கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழைசொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின் மேல் மோதியும், அது விழவில்லை ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திவாரம் போடப்பட்டிருந்தது.

நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்து முழுவதும் அழிந்து போனது என்றார். (மத்தேயு - 7:1,27)



# அறிவியல் உலகம்


## உங்கள் மொபைல் போன் ஒரிஜினலா போலியானதா? கண்டறிவது எப்படி



நாம் வைத்துள்ள மொபைல் போன், ஒரிஜினலா அல்லது போலியானதா என்பதை வெகு சுலப மாக கண்டறியலாம். குறிப்பாக, சாதாரண செயல்பாட்டின் மூலம் IMEI எண்ணைக் கண்டறிய முடியும். உங்கள் மொபைலில் *#06# எனத் தட்டச்சிடுங்கள். உடனே உங்கள் மொபைல் போனிற்கான IMEI எண் காட்டப்படும். அந்த IMEI எண்ணைக் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

பின்பு, அந்த IMEI எண்ணை ஒரு SMS ஆக தட்டச்சிட்டு 53235 என்ற எண்ணிற்கு SMS செய்ய வேண்டும். இப்பொழுது உங்கள் பதில் SMS ஆக Success என்ற செய்தி வந்திருக்க வேண்டும். அப்படி வரவில்லை என்றால், உங்கள் மொபைல் போன் போலியானது என அறியலாம்.

## நகச்சுற்று மருத்துவம்



பலருக்கு நகச்சுற்று ஏற்படுவது சாதாரணமான ஓர் நிகழ்வு. எலுமிச்சம் பழத்தை நகச்சுற்று வந்த விரலில் சொருகி வைப்பதை அறிவோம். ஆனால் எலுமிச்சம் பழத்தால் இவ்வியாதியைக் குணப்படுத்த முடியாது. மாறாக எலுமிச்சம் பழம் கிருமித் தொற்றை நீக்குமே தவிர நோயைக் குணமாக்காது.

சீழை வெளியேற்றி நகத்தில் ஏற்பட்டிருக்கும் புண்ணை மாற்றுவதற்கு அறுகம்புல், மஞ்சள் மற்றும் வேப்பிலை ஆகியவற்றை அரைத்துப் பூசலாம். இதனால் நகச்சுற்று குணமடையும்.


## கண் அசைவில் இயங்கும் Samsung Galexy S4



அப்பிளின் ஐ-போனை மிஞ்சுவதற்காக தன்னுடைய அடுத்த தயாரிப்பான Galexy S4ஐ வெளியிடுவதாக Samsung அறிவித்துள்ளது. இந்தப் புதிய செல்பொன், பார்ப்பவரின் கண் அசைவைக் கொண்டு பக்கங்களை நகர்த்தும் தன்மை உடையதாக இருக்கும் என்று, இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது 5அங்குலமான திரையைக் கொண்டதாகும். 13 மெகா பிக்ஸல் கமரா வசதியையும் கொண்டது. மொபைல் போன் மற்றும் டொப்லெட் கம்பியூட்டர் போன்றவற்றை, கண்களின் அசைவைக் கொண்டு இயக்கக்கூடிய கணனிப் பயன்பாட்டு மென்பொருள் பயன்படுத்தப்பட்டிருப்பதாக, Samsung நிறுவனம் தெரிவித்தள்ளது. எனவே, இந்தப் பதிய வெளியீடு மிகுந்த எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

## நீரிழிவு நோய்க்கான சிகிச்சை



உலகில் நீரிழிவு நோய் உள்ளவர்கள் 16 % பேர் இன்சுலின் உபயோகிக்கிறார்கள். மற்றவர்களில் 54% பேர் மாத்திரைகளும், மீதி 17% பேர் இரண்டும் உபயோகிக்கிறார்கள். நீரிழிவு நோய் முதலாம் நிலையில் உள்ளவர்களுக்கு இரத்தத்தில் சர்க்கரை அளவு சாதாரணமானவர்களை விட அதிகமாக இருக்கும். ஆனால், அதே சமயம் இவர்களை நீரிழிவு நோய் உள்ளவர்கள் என்றும் சொல்ல முடியாது. இவர்களுக்கு உணவு உண்பதற்கு முன் சர்க்கரை அளவு பாதிக்கப்பட்டிருக்கும். அதேபோல, இவர்களுக்கு முன் இரவு முழுவதும் சாப்பிடாமல் இருந்து மறுநாள் காலை அளவு பார்க்கப்படும் போது சர்க்கரை அளவு 100,120 மில்லிகிராம், டெசிலிட்டர் இருக்கும். இது சாதாரணமானவர்களின் அளவை விட அதிகம். உலகில் இந்நோய் அறிகுறி பெரும்பாலானவர்களிடம் காணப்படுகிறமை குறிப்பிடத்தக்கது.

முதலாம் வகை, நீரிழிவு நோய் உள்ளவர்கள் இன்சுலின், அல்லது ஒரு 'பம்ப்' கொண்டு மருந்து எடுத்துக்கொள்ள வேண்டும். இரண்டாம் வகை நோய் உள்ளவர்கள் உடற்பயிற்சி மூலம் எடையை குறைப்பதோடு, மருத்துவர் சிபார்சு செய்யும் மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும். இதை தவிர்த்து கொழுப்புச் சத்தை குறைக்கவும் மாத்திரை எடுத்து கொள்ளவேண்டும்.

## மாறிவரும் பெண்ணியம் பற்றிய படிமங்கள்

**கடந்த 8ஆம் திகதி கொண்டாடப்பட்ட சர்வதேசமகளிர்தினத்தைமுன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**



எல்லாவற்றுக்கும் ஒரு தினத்தை வரையறுத்து ஒவ்வொரு தினத்துக்கும், அதற்குரிய கொண்டாட்டங்களை நிகழ்த்துவது மேலைத்தேய நடைமுறையாகும். தற்போது கீழைத்தேய உலகமும் இவ்வறையறைகளுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளமையின் பிரதிபலிப்புக்களே, நாம் கொண்டாடும் சர்வதேச நினைவுதினங்கள்.

பெற்றோர்கள் தினம், அன்னையர் தினம், தொழிலாளர் தினம், எயிட்ஸ் தினம் என்று வருடத்தின் பெரும்பகுதி நாட்களையும் ஒவ்வொரு நினைவுகூரல் விழாக்களும் இடம் பிடித்துள்ளன. இந்த நிலையிலே தான் உலக மகளிரின் சமவுரிமைகள், முன்னேற்றம் குறித்த விழிப்புணர்வை வெளிப்படுத்தும் வகையில் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

அடிமைத்தனம் எங்கு இருக்கிறதோ அங்குதான் சுதந்திரம் மற்றும் எழுச்சி தேவைப்படுகிறது. இவ்வாறான நடைமுறை உண்மையினடியாகத் தோன்றியதே மகளிர் தினமும். 102வது மகளிர் தினம் கொண்டாடப்பட்டிருக்கும் நிலையில், எந்த நோக்கத்திற்காக சர்வதேச தினங்கள் ஏற்படுத்தப்பட்டனவோ, அந்த நோக்கத்தைநோக்கிய பயணத்தின் முன்னேற்றத்திற்கான முயற்சிகளில், ஆக்கபூர்வமுடன் செயற்படாது ஆத்மார்த்தபூர்வமாக கொண்டாட வேணடிய தினங்கள், களியாட்ட தினங்களாக கொண்டாடப்படும் நிலமை எம்மத்தியில் ஏற்பட்டுள்ளமை, நோக்கங்கள் மறக்கப்பட்டு வருகின்றமையை நன்குணர்த்துகின்றன.

இந்நிலையில் மகளிர் தினம் தினம் எனப்படும் சர்வதேச நினைவு தினமும் நெருக்கடியான உணர்வுநிலைகளிலிருந்து உருவாக்கப்பட்ட, ஒன்று என்பதை அதன் வரலாறுகளிலிருந்து அறியலாம். அதனால், இச்சர்வதேச நினைவு தினத்திலாவது குறித்த நோக்கத்தை வெளிப்படுத்தவும், நிறைவேற்றவும் முன் வருதல் அத்தினத்தை ஆரோக்கியமாக்கும். பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சமூகத்தில் மாறிவரும் பெண் பற்றிய படிமங்கள், தற்போதைய பெண்களின் முன்னேற்றம், மகளிர் தினத்தில் பெண்கள் எடுத்துக் கொள்ளக்கூடிய முயற்சியாண்மைகள் குறித்துச் இந்நாளில் சிந்திப்பது நல்லது.

**பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள்:**

பல்வேறு வகைகளில் இன்று பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன. உடல், உள ரீதியிலான கொடுமைகள் நாளுக்கு நாள் வித்தியாசப்படுகின்றன. என்னென்ன கொடுமைகள் பெண்களுக்கெதிரானவை எனப் பட்டியல்ப்படுத்தப்பட்டுள்ளன. இதில் பிரதானமானவை, திராவகம் வீசுதல், சீதனக் கொடுமை, வீட்டில் பெண்களுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல், விபச்சாரத்துக்கு நிர்ப்பந்தித்தல், கர்ப்பிணிகளைக் கொலை செய்தல், வீட்டு வன்முறைகள், இளவயதுத் திருமணம், கடத்தல், கௌரவ கொலைகள், ஊதியம் வழங்காமை, வேலைத்தளங்களில் வன்முறை, தரக்குறைவாக நடத்தல், போர்க்குற்றங்கள், இனரீதியிலான ஒடுக்கு முறைகள், இணைய அரட்டை, சமூக வலைத்தளங்கள் மூலம் தகவல் பெற்று நெருக்குதல் தருதல் என்பன. இவை உலகெங்கிலுமுள்ள பெண்கள் இன்றுவரை அனுபவித்து வருபவை.

சமூகமொன்றின் உச்சப் பெறுமானங்கள் உடைக்கப்படும் போது, அச்சமூகத்தை நச்சு வளையங்கள் போல் வளைத்துப் பிடிக்கும் சீரழிவுக் கலாச்சாரங்கள் மலிந்துவிட்ட ஒரு காலப்பகுதி, தற்போது இலங்கைத் திருநாட்டில் உருவாகியுள்ளது. யுத்தத்தின் பின்னரான காலத்தில்த் தான் இத்தகைய செயல்கள் உக்கிரம் பெற்றுள்ளன. பாலியல் வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகம், பெண்கொடுமை, விபசாரங்கள், போதை வஸ்துக்கள், சிறுவயதுத் திருமாணங்கள் மலிந்துவிட்ட ஒரு சமூகமாக இது மாறியுள்ளது.

- அநாமிக்கா -

தொடரும் ...

# விளையாட்டு உலகம்

## ஐ.பி.எல் துவக்க விழாவில் பாலிவூட் நடிகைகள் அசத்தல்



ஐ.பி.எல் துவக்க விழாவில் பாலிவூட் நடிகைகள் கத்தரினா கைப், பிரியங்கா சோப்ரா மீண்டும் அசத்த உள்ளனர். ஆறாவது இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்) தொடர், வரும் ஏப்ரல் 3இல் தொடங்குகிறது.

இதில் நடப்புச் சம்பியன் கல்கத்தா நைட் ரைடர்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ், டெல்லி டேர்டெவில்ஸ், உள்ளிட்ட 9அணிகள் பங்கேற்கின்றன. இதற்கான தொடக்க விழா ஏப்ரல் 2இல் கொல்கத்தா ''சால்ட் லேக்'' மைதானத்தில் நடக்கவுள்ளது. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி உரிமையாளரும், நடிகருமான ஷாருக்கானின் ''ரெட் சில்லிஸ்'' நிறுவனம் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் பாலிவூட் நடிகைகள் கத்தரினா கைப், பிரியங்கா சோப்ரா ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். ஆறாவது ஐ.பி.எல் தொடக்க விழா நிகழ்ச்சிகளை நடத்துவதில், எந்தத் தடையும் இல்லை என மேற்கு வங்க விளையாட்டுத்துறை அமைச்சர், மதன் மித்ரா கூறியுள்ளார்.

## மரடோனா போன்றவர் சச்சின் : டொனால்ட் புகழாரம்




கால்பந்து ஜாம்பவான்களான பீலே, மாரடோனாவின் கலவை தான் சச்சின், என ஆலன் டொனால்ட தெரிவித்தார். இந்திய அணியின் 'மாஸ்டர் பேட்ஸ்மேன்' சச்சின் 39. சர்வதேச போட்டிகளில் சதத்தில் சதம் உட்பட எண்ணற்ற சாதனைகள் படைத்துள்ளார். இவரது திறமையை பாராட்டிய தென் ஆப்ரிக்க அணியின் முன்னாள் வீரர் டொனால்ட் கூறியது:

பிரேசிலின் பீலே ஆர்ஜென்டினாவின் மாரடோனா ஆகியோரது கலவை தான் சச்சின். இவர் ஓய்வு பெற்றால் கிரிக்கெட்டின் மதிப்பு போய்விடும். நம்பமுடியாத திறமை படைத்த மிகப்பெரிய வீரர் என்று நினைத்தால், உடனே நினைவுக்கு வருபவர் இவர்தான்.

1985ல் என் தாத்தா 'விஸ்டன்' கிரிக்கெட் புத்தகத்தில் சச்சினை காண்பித்தார். அதன் பின் யோர்க்ஷயர் அணிக்காக இவர் பங்கேற்றபோது முதன் முதலாக நேரில் பார்த்தேன். தற்போது வரை இவர் தான் சிறந்த வீரர் என்பதற்கு மாற்றுக்கருத்தே என்னிடம் கிடையாது. இவருக்கு எதிராக எப்படி பவுலிங் செய்வது என்று போட்டியின் இரண்டு நாட்களுக்கு முன் சிந்திக்க மாட்டோம். ஒரு மாதத்திற்கு முன்பே திட்டமிடுவோம். இவ்வாறு டொனால்ட் கூறினார்.

## உசைன் போல்ட்டுக்கு 'லாரஸ்' விருது.



உலகின் சிறந்த வீரருக்கான லாரஸ் விருதை, மூன்றாவது முறையாகத் தட்டிச் சென்றார் 'மின்னல் வேக வீரா' உசைன் போல்ட். ''லாரஸ் உலக விளையாட்டு விருது'' கடந்த 2000ஆம் ஆண்டு முதல், வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான விருதுப் பட்டியலுக்கு, பல்வேறு விளையாட்டுக்களில் இருந்து சுமார் 50பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

இதில் சிறந்த வீரருக்கான லாரஸ் விருதை, லண்டன் ஒலிம்பிக்கில் 100மீ, 200மீ, மற்றும் 4x100மீ ஓட்டத்தில் தங்கம் வென்ற ஜமைக்காவின் உசைன் போல்ட்(26), மூன்றாவது முறையாகத் தட்டிச் சென்றார். இதற்கு முன் 2009, 2010இல் இவ்விருதை வென்றுள்ளார்.

இதேவேளை சிறந்த வீராங்கனை விருதை இங்கிலாந்தின் ஹெப்டத்லான் நட்சத்திரம் ஜெசிகா எனிஸ் (27) பெற்றார். இங்கிலாந்து டென்னிஸ் வீரர் அன்டி முரேக்கு, ஆண்டின் எழுச்சி வீரர் விருது கிடைத்துள்ளது.

சிறந்த அணி மற்றும் விளையாட்டு உணர்வுடன் நடந்து கொண்ட அணி என, ஐரோப்பாவின் ரைடர் கப் அணி (கோல்ப்) 2 விருதுகளைத் தட்டிச் சென்றுள்ளது.

## எகிப்து கால்பந்து கலவரம்: 21 பேருக்கு மரணதண்டனை விதிப்பு



எகிப்தில் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற்ற, பிரீமியர் லீக் கால்பந்து போட்டியின்போது கலவரம் ஏற்பட்டது. போர்ட் செட் நகரில் நடந்த ஆட்டத்தில், எகிப்தின் முன்னணி அணிகளில் ஒன்றான அல் அலி கிளப் அணியை, உள்ளூரைச் சேர்ந்த அல் மஸ்ரி அணி வீழ்த்தியது. இந்த வெற்றிக் கொண்டாட்டத்தின்போது, இரு தரப்பு ரசிகர்களுக்குமிடையே ஏற்பட்ட மோதலில் 70-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

எகிப்து கால்பந்து வரலாற்றில் நடந்த மிக மோசமான இந்த வன்முறை தொடர்பாக, பலர் கைது செய்யப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிமன்றம், கடந்த மாதம் 21 பேருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இந்த தீர்ப்புக்கு எதிராக போர்ட் செட் நகரில் நடந்த போராட்டத்தில் வன்முறை வெடித்தது. பொலிஸ் தடியடி மற்றும் துப்பாக்கி சூட்டில் பலர் உயிரிழந்தனர். பின்னர் அங்கு இராணுவம் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், 21 பேரின் மரண தண்டனைக்கு எதிரான மனுவை விசாரித்த எகிப்து நீதிமன்றம், மரண தண்டனையை உறுதி செய்து அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது. 5 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. நகரின் முன்னாள் பாதுகாப்புத்துறை தலைவர் எஸ்ஸாம் சன்மார்க், காவல்துறை உயர் அதிகாரி உள்ளிட்ட 10 பேருக்கு தலா 15 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

இதுதவிர 6 பேருக்கு தலா 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 2 பேருக்கு 5 ஆண்டுகள் சிறையும், ஒருவருக்கு 12 மாத சிறை தண்டனையும் விதித்து நீதிபதி தீர்ப்பு அளித்துள்ளார். மேலும் 28 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

## போதை மருந்து விவகாரம் – சிக்கினார் குத்துச்சண்டை வீரர் விஜேந்தர்.



விஜேந்தர் சிங் போதை மருந்து உட்கொண்டது அம்பலமாகியுள்ளது. உடல் வலிமையை அதிகரிக்க பயன்படுத்தியதாக, இவரது நண்பரும் சக வீரருமான ராம் சிங் பகிரங்கமாக தெரிவித்துள்ளார். பஞ்சாப்பில் சில நாட்களுக்கு முன் குத்துச்சண்டை வீரர் ராம்சிங்கை, போதைப் பொருள் வைத்திருந்ததாக பொலீசார் கைது செய்தனர்.


வீட்டில் 'ரெய்டு' நடந்த போது, பீஜிங் ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற, இந்திய குத்துச்சண்டை வீரர் விஜேந்தர் சிங்கின் மனைவியின் பெயரில், பதிவு செய்யப்பட்ட கார் வெளியே நின்றிருந்ததால், இவருக்கும் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்தது. இதை விஜேந்தர் மறுத்தார்.

இந்தச் சூழலில், போதை மருந்து உட்கொண்டதை ஒப்புக் கொண்ட ராம் சிங் கூறுகையில், 'நானும், விஜேந்தரும் ஊக்கம் தரும் கூடுதல் உணவு என நினைத்து, சிறிய அளவில் போதைப்பொருளை சில நேரங்களில் உட்கொண்டோம். உடல் வலிமை மற்றும் சக்தியை அதிகரிக்க உதவும் என்றே கூறினர்.

உண்மையில் இது போதை மருந்து என்று தெரியாது. ஒரு கட்டத்தில் போதைப்பொருள் என தெரிந்தவுடன், வாங்குவதை நிறுத்திவிட்டோம். கடந்த ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் இரண்டு அல்லது மூன்று முறை இதை விஜேந்தர் உட்கொண்டார். அவரும் உண்மை தெரிந்தவுடன் நிறுத்திவிட்டார்,' என்றார்.

போதை மருந்து உட்கொண்டது அம்பலமானதைத் தொடர்ந்து, விஜேந்தருக்கு நெருக்கடி அதிகரித்துள்ளது. இவரிடமும் போலீசார் விரைவில் விசாரணை நடத்துவார்கள் எனத் தெரிகிறது

## சுவிஸ் ஓபன் தொடரில் காஷ்யப் வெற்றி



சுவிஸ் ஓபன் பாட்மின்டன் தொடரின் முதல் சுற்றில், இந்தியாவின் காஷ்யப் வெற்றி பெற்றார்.

சுவிட்சர்லாந்தில் உள்ள பேஷல் நகரில் ஏழாவது சுவிஸ் ஓபன் பாட்மின்டன் தொடர் நடக்கிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில், இந்தியாவின் காஷ்யப், சீன தைபேவின் ஹுசான் யீ ஹுயுசை சந்தித்தார். போட்டியின் துவக்கம் முதல் ஆதிக்கம் செலுத்திய காஷ்யப், முதல் செட்டை 21-7 என எளிதாக கைப்பற்றினார். தொடர்ந்து இரண்டாவது செட்டையும் காஷ்யப் 21-19 என வென்றார்.

முடிவில், இந்தியாவின் காஷ்யப் 21-7, 21-19 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

சௌரவ் ஏமாற்றம்: மற்றொரு ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று போட்டியில், இந்தியாவின் பிரனாய், ஒஸ்ரியாவின் மைக்கேலை சந்தித்தார். முதல் செட்டை 18-21 என கோட்டைவிட்ட பிரனாய், அடுத்த இரண்டு செட்களையும் 21-9, 21-12 என சுலபமாக வென்று, இரண்டாவது சுற்றுக்குள் நுழைந்தார்.

மற்றொரு போட்டியில், இந்தியாவின் சௌரவ் வர்மா, இந்தோனேஷியாவின் ரும்பக்காவை சந்தித்தார். இதில் தொடக்கம் முதல் சொதப்பிய சௌரவ், 21-11, 18-21, 21-23 என்ற செட்களில் தோல்வியடைந்து வெளியேறினார். மற்றொரு போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த், டென்மார்க்கின் ஜான் ஜார்ஜென்சனை சந்தித்தார். இதில் ஸ்ரீகாந்த், 21-10, 17-21, 13-17 என்ற செட்களில் தோல்வியடைந்தார்.

# உலகச் செய்திகள்

## டில்லி மாணவி விவகாரம் : குற்றவாளிகள் நீதிமன்றத்தில் கதறல்.


டில்லியில் மருத்துவ மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டு, டில்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள குற்றவாளிகள், தங்களை சுட்டுக்கொன்று விடுங்கள் எனவும், ஆனால் தீகார் சிறை யில் மட்டும் அடைக்க வேண்டாம் எனவும் கோர்ட்டில் கதறி உள்ளனர்.

டில்லி சம்பவ குற்றவாளியான பஸ் டிரைவர் ராம் சிங், கடந்த வாரம் சிறையில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட நிலையில், மற்ற 3 குற்றவாளிகளும் விசாரணைக்காக கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு, விசாரணைக்குப் பின்னர், குற்றவாளிகள் 5 பேரையும் திகாரில் உள்ள வேறு சிறைக்கு மாற்ற நீதிபதி உத்தரவிட்டார்.

அப்போது தங்களை துப்பாக்கியால் சுட்டுக்கொன்று விடுமாறும், திகார் சிறையில் அடைக்க வேண்டாம் எனவும் குற்றவாளிகள் 5 பேரும் நீதிபதியிடம் மன்றாடி உள்ளனர். அவர்களின் கோரிக்கையை ஏற்க மறுத்த நீதிபதி, குற்றவாளிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் பாதுகாப்புக் குறித்து திகார் சிறை அதிகாரிகள் தனக்கு அறிக்கை சமர்ப்பித்து வருவதாகத் தெரிவித்தார்.

பாலியல் பலாத்காரங்களுக்கு எதிரான, சட்டங்கள் தொடர்பான மசோதா குறித்து நடைபெற்ற சிறப்பு மத்திய அமைச்சரவை கூட்டம், உள்துறை அமைச்சர் சுஷில்குமார் ஷிண்டே தலைமையில் நடைபெற்றது. பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோருக்கு, அதிகபட்ச தண்டனையாக அவர்கள் வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைக்கப்பட வேண்டும் என, சட்ட முன்வரைவில் திருத்தம் கொண்டு வர பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

## கென்யாவுக்கு அடுத்த ஜனாதிபதியாவேன் - ஒபாமாவின் அண்ணன்



கென்யா நாட்டுக்கு ஜனாதிபதியாகுவதே எனது இலட்சியம் என, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் அண்ணன் குறிப்பிட்டுள்ளார்.

ஒபாமாவின் அண்ணன் மாலிக் ஒபாமா அண்மையில் கென்யாவின் சியாயா பகுதி ஆளுனர் போட்டியில் களமிறங்கி தோல்வியடைந்தார். எனினும் தனது தம்பியான ஒபாமாவைப் போல நிச்சயம் ஒருநாள் கென்யாவின் ஜனாதிபதியாவேன் என உறுதியாகக் கூறியுள்ளார்.

மாலிக் ஒபாமாவிற்கு 12 மனைவிகள் என்பதும் அண்மையில், 17 வயது பெண்ணொருவரையும் திருமணம் செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானுக்கு பொருளாதார தடை விதிப்போம் - அமெரிக்கா எச்சிரிக்கை



ஈரான் நாட்டிலிருந்து 7.5 பில்லியன் டொலர் மதிப்பிலான, எரிவாயு குழாய்களைப் பதிக்கும் திட்டத்தை, பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரியும், ஈரான் ஜனாதிபதி அஹமதி நிஜாத்தும் இன்று தொடங்கிவைத்தனர்.

இத்திட்டத்தை கைவிடவேண்டும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது. இதுகுறித்து அமெரிக்க செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நூலாந்து கருத்துத் தெரிவிக்கையில், ஈரான் - பாகிஸ்தான் எரிவாயு குழாய் இணைப்புத் திட்டம் குறித்து, நாங்கள் மிகவும் கவலை அடைந்து உள்ளோம். இதுகுறித்து எமது கவலைகளை பாகிஸ்தானிடம் தெளிவுபடுத்தியுள்ளோம். பாகிஸ் தானுக்கு தேவைப்படும் மாற்று ஆற்றல் திட்டங்கள் அளிப்பது குறித்து, பாகிஸ்தானுக்கு உறுதியளித்துள்ளோம்.

இதற்கு முன்பு 10, 15 முறை இதுபோன்று திட்டங்கள் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. எனவே என்ன நடக்கப்போகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். எனவே பாகிஸ்தான் தவறான வழிகளில் செல்ல அறிவுறுத்தப்படும். எனவே பாகிஸ்தான் பொருளாதார தடைகளை சந்திக்க நேரிடும் என்று தெரிவித்துள்ளார்.


## இலங்கை விவகாரம் குறித்த் தமிழக மாணவர்களின் எதிர்ப்பு.



இலங்கை இனப்படுகொலை குறித்து, சர்வதேச விசாரணையைக் கோரியும், தமிழீழத்திற்கான பொது வாக்கெடுப்பு நடத்தக் கோரியும், சென்னை லயோலா கல்லூரி மாணவர்கள் 8பேர் மேற்கொண்டு வரும் காலவரையறையற்ற எதிர்ப்பு உண்ணாவிரதப் போராட்டம், தமிழகத்தில் பெரும் எதிர்ப்பலைகளை தோற்றுவித்துள்ளது.

தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களும் இப்போராட்டத்தில் இணைந்துள்ளனர். மத்திய அரசின் பிரதிநிதிகள் நேரில் வந்தால் மட்டுமே, பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று மாணவர்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர். இப்போராட்டம் குறித்து அவர்கள் 9கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். இவ்விவகாரம் குறித்து தமிழக அரசு உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டிருக்கிறது.

## 'முதலாம் பிரான்சிஸ்' புதிய போப் ஆண்டவராகத் தெரிவு



120 கோடி கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் கலைவராக இருந்த போப் 16 ஆம் பெனடிக்ட் முதுமை காரணமாக கடந்த 28 ஆம் திகதி தனது பதவியை துறந்து வத்திக்கான் நகரில் இருந்து வெளியேறினார்.

இதனைத்தொடர்ந்து புதிய போப் ஆண்டவரை தேர்வு செய்ய, உலகம் முழுவதும் இருந்து வந்திருந்த 115 கர்தினால்கள் வத்திக்கான் தேவாலயத்தில் கூடி, இரண்டு நாள் ஆலோசனை நடத்தினர்.

இறுதியில் நேற்று இரவு 11.45 மணிக்கு ஆர்ஜென்டினாவின் பியுனோஸ் ஏரெஸ் நகர் ஆர்ச் பிஷப் ஜார்ஜ் மரியோ பெர்கோக்லியோ தேர்வு செய்யப்பட்டார். லத்தீன் அமெரிக்கா நாடுகளில் இருந்து தேர்வு செய்யப்படும் முதல் போப் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. போப் முதலாம் பிரான்சிஸ் என்ற பெயரை தேர்ந்தெடுத்தார். இனி அவர் போப் முதலாம் பிரான்சிஸ் என்றே அழைக்கப்படுவார். வாடிகன் அரண்மனை வளாக மண்டபத்திற்கு வந்த போப் முதலாம் பிரான்சிஸ் புதிய போப்பின் வருகைக்காக ஆரவாரத்துடன் காத்திருந்த மக்களிடையே பேசினார்.

அப்போது அன்பும் சகோதரத்துவமும் வளர உலகம் வழிகாண வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும் அங்கு கூடியிருந்த மக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

## ஆங்சாங் சூகி மீண்டும் தலைவராகத் தெரிவு



மியன்மாரில் தேசிய ஜனநாயக லீக் கட்சியின் தலைவராக ஆங்சாங் சூகி மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மியன்மார் நாட்டில் பல ஆண்டுகளாக இராணுவ ஆட்சி நடக்கிறது. அந்நாட்டின் ஜனநாயக தலைவரான ஆங்சாங் சூகி 1990 ஆம் ஆண்டு நடந்த ஜனநாயக தேர்தலில் அமோக வெற்றி பெற்றார். ஆனால் அவரை ஆட்சியில் அமரவிடாமல் இராணுவ ஆட்சியாளர்கள் வீட்டு சிறையில் அடைத்தனர்.

ஜனநாயகத்துக்காக போராடிய இவருக்கு சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. மியன்மாரின் தற்போது ஜனநாயக நடைமுறைகள் தலைகாட்ட ஆரம்பித்துள்ளன. கடந்த ஆண்டு நடந்த இடைத்தேர்தலில் ஆங்சாங் சூகி எம்.பி யாக தெரிவு செய்யப்பட்டார்.

மியன்மாரின் முக்கிய எதிர்கட்சியான தேசிய ஜனநாயக லீக் கட்சியின் மாநாடு யாங்கூனில் நடக்கிறது. இந்த மாநாட்டில் ஆங்சாங் சூகி மீண்டும் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார்.

இக்கட்சியின் 120 உயர்மட்ட உறுப்பினர்கள் ஆங்சாங் சூகியை ஒரு மனதாக தலைவராக தேர்ந்தெடுத்துள்ளனர். இந்த தேர்தலை பார்வையிட ஆயிரக்கணக்கான கட்சி தொண்டர்கள் கட்சி அலுவலகம் முன் திரண்டனர். அவர்கள் அனைவரும் ஆங்சாங் சூகிக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

## இலங்கைப் பெண்ணின் உடல் குப்பைத்தொட்டியில் - லெபனானில் சம்பவம்


லெபனானில் இலங்கைப் பணிப் பெண் ஒருவரின் உடல் குப்பைத் தொட்டியொன்றுக்குள் இருந்து பொலி சாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இச்சடலத்தில் கைகள், கால்கள், தலை ஆகியன வெட்டப்பட்டிருந்தன. இலங்கையர்கள் சிலர் மேற்கொண்ட முறைப்பாட்டின் பேரில் பொலிஸார் தேடுதல் வேட்டை மேற்கொண்டிருந்த வேளையில் குப்பைத் தொட்டி ஒன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டது. சடலம் தற்பொழுது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# விந்தை உலகம்

## மூன்று வருடங்கள் தாயின் எழும்புக்கூடுடன்...

ஜப்பானில் உஸா பகுதியில், மூன்று வருடங்களாக தங்களின் வீட்டுக்குள், தாயின் எலும்புக் கூட்டை வைத்திருந்ததற்காக, ஐம்பது வயதைக் கடந்த இரண்டு மகள்கள், மற்றும் மகன்(60) ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதிகாரிகள் அந்த வீட்டில் வசித்த மூதாட்டியின் நலனைப் பற்றி விசாரிக்க அங்கு சென்றபோது, அண்ணன் தங்கைகளான மூவரும், அதிகாரிகளை உள்ளே விட மறுத்துவிட்டனர். இதனால் சந்தேகமடைந்த அதிகாரிகள், உள்ளே சென்று ஆய்வு செய்தபோது, மூதாட்டியின் எலும்புக் கூட்டைக் கண்டனர்.


இதுபற்றி அவர்கள் விசாரித்தபோது, எங்கள் அம்மா இறந்து போகவில்லை. அவள் உயர்ந்த பரிமாணங்களை அடையும் செயலாக்கத்தில் உள்ளார். அவள் கடவுளாக எங்களுடன் இருக்கிறார். என்று கைதான அந்த உடன்பிறப்புகள் கூறியுள்ளனர். மூன்று வருடங்களாக உறவினர்களைக் கூட வீட்டில் அனுமதிக்காமல், இந்த மூவரும் வாழ்ந்து வந்து உள்ளனர். மரியாதைக்குரிய சமூகத்தைச் சார்ந்த இவர்களின் நடவடிக்கைகள், சில வருடங்களுக்கு முன்பு தான் மாறியது என்று, அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் கூறியுள்ளனர். மூதாட்டியின் பென்ஷன் பணத்தை ஏமாற்றிப் பெறுவதற்காகக் கூட இவ்வாறு செய்திருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகித்தனர்.







## இப்படியும் ஒரு அழகுச் சிகிச்சை

அழகை விரும்பாத மனிதர்கள் மிகச் சொற்பமான அளவே உள்ளனர். இதனால் அழகு ஒரு வியாபாரமாக்கப்பட்டு வருவதுடன், அழகைத் தேடி பல செயற்கை சிகிச்சை முறைகளை மனிதர்கள் நாடுகின்றனர். இதற்கு அமைவாக ஜப்பானில் மணல் குளியல் மூலம் அழகுச் சிகிச்சை வழங்கும் முறை தற்போது நடைமுறையில் இருக்கின்றது. இந்தச் சிகிச்சை முறையின் போது, 40 டிகிரி வெப்பநிலை கொண்ட மணலினுள் 15 தொடக்கம் 20 நிமிடங்கள் வரை தொடர்ச்சியாக இருக்க வேண்டுமாம். சுமார் 70 வருடங்களுக்கு முன்னர் கண்டறியப்பட்ட இந்த சிகிச்சை முறைக்காக 15 நிமிடங்களுக்கு 70 டொலர்கள் அறவிடப்படுகின்றதாம்.





## விமானமாக மாறிய முட்டைப் பெட்டிகள்

பல்வேறு கழிவுப்பொருட்களையும் பயன்படுத்தி உருவாக்கப்படும் ஆக்கங்கள், மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெறுவது வழக்கமாகும்.

இதற்கு இணங்க சுமார் 6,500 முட்டைகளைக் கொள்ளக்கூடிய பெட்டிகளினால், யுத்த விமானம் ஒன்றை உருவாக்கியுள்ளார்கள். இதன் நீளம் 12 மீற்றர்களாகவும், அகலம் 12 மீற்றர்களாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.






தினப்புயலுக்கு, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை அனைத்து அளவுகளிலுமான விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். வர்த்தக நண்பர்கள் தொடர்பு கொள்ள

இல-154, 6ஆம் ஒழுங்கை
கண்டி வீதி, தேக்கவத்தை, வவுனியா.
தொ.பே- 0711850885














இப்பத்திரிகை இலக்கம் 165A, குருமன்காட்டில் அமைந்துள்ள G.H பதிப்பகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 17.03.2013 அன்று வெளியிடப்பட்டது.